தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ

புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 23 ஜுல்-கஜ் 29 இதழ் ..9
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-11-8.

## மாவட்ட அமைச்சருக்கு வரவேறபு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன், யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோருக்கு இன்று பிற்பகல் கொடிகாமத்தில் திருநாவுக்கரசு மடாலயத்தில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

திரு. கே. வி. பி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வரவேற்பில்

(8-ம் பக்கம் பார்க்க.

# சிறிமா அரசு செய்தவற்றையே இன்றைய அரசும் செய்கிறது!

## அவசரகாலச் சட்டமின்றி அதே அதிகாரங்கள் அமுல்

### பாராளுமன்றத்தில் 'அமிர்' கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, தமது ஆட்சிக் காலத்தில் தேவையில்லாத சமயங்களில் எல்லாம் அவசர காலச் சட்டத்தை நீடித்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று அவர் மீது குற்றம் சுமத்தி அவரது குடியியல் உரிமைகளைப் பறித்துவிட்ட இன்றைய அரசு; அன்றைய அரசு ஆட்சிக்காலத்தில் [illegible]காலச் சட்டத்தின் கீழ் மேற்கொண்ட அதே நடவடிக்கைகளை அவசரகாலச் சட்டமின்றி நடைமுறைப்படுத்திவருகிறது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

பொது சன பாதுகாப்புச் சட்டத்தை அமுல் நடத்தாமல்- அவசரகாலச் சட்டத்தைப்பிரகடனம் செய்யாமல்- அவசரகாலச் சட்டத்தின் கீழான அதிகாரங்களை இன்றைய அரசு அமுல் செய்து வருகிறது, இது பாரதூரமான விஷமமாகும். என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

குற்றவியல் நடைமுறைகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்கும் திருத்தச்சட்டமூல விவாதத்தின்போது பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது

இந்தச் சட்டமூலம் ஆரம்பத்தில் ஆறுமாதங்களுக்கே கொண்டுவரப்பட்டு பின்னர் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டது. இப்போது 2 ஆண்டு நீடிக்கப்படுகிறது. இது தேவையற்ற நடவடிக்கையாகும்.

பிரித்தானிய ஆட்சிக்காலம் முதல் 78ம் ஆண்டு வரை மாஜிஸ்ரேட்டுக்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் இருந்து வந்தது. ஆனால் இன்று சில சந்தர்ப்பங்களில் இச்சட்டமூலத்தின் கீழ் நீதிமன்றங்களில் நம்பிக்கை இன்றி பிணை வழங்கும் அதிகாரம் உயர். நீதிமன்றங்களுக்கும் மேல் நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (ம-இ)

## நீதிமன்றத்திலிருந்து வரும் வழியில் சிறைக்காவலரை தாக்கி 8 கைதிகள் தப்பி ஓட்டம்!

### சங்கானையில் இருவர் கைது; மூவர் சரண்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கொள்ளை வழக்கின் சந்தேக நபர்கள் எண்மரும் நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டபோது சிறைக்காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பி ஓடிவிட்டார்கள்.

இவர்களில் இருவர் சங்கானையில் சைக்கிள் ஒன்றைக் கொள்ளையடிக்க முயற்சித்தபோது பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். மூவர் நேற்று சிறைச்சாலையில் சரணடைந்தனர்,

புங்குடுதீவில் நடைபெற்ற லட்ச ரூபா கொள்ளை வழக்கின் சந்தேகநபர்களான 8 பேரையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்திலிருந்து கடந்தபுதன்கிழமை சிறைக்காவர் இருவர்பஸ் வண்டிமூலம் சிறைச்சாக்குக் கொண்டுசென்றசமயம் பஸ்லிருந்து இறங்கியதும் சங்கிலியால் சிறைக்காவலரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்து திறப்பைப் பறித்தெடுத்து தமது கைவிலங்குகளைத் திறந்து கொண்டு 8 பேரும்

(8-ம் பக்கம் பார்க்க)

## "சமுதாய மாற்றமின்றேல் ஒழுக்கநெறி குன்றிவிடும்"

### தத்துவமேதை கிருஷ்ணமூர்த்தி எச்சரிக்கை



(கொழும்பு)

**"யுத்தம் ஒரு சாபக் கேடானது? உலக நாடுகள், ஆயுத உற்பத்திக்காக மட்டும் தினசரி ஐம்பது லட்சம் டாலர்களை செலவிட்டுவருகின்றன"**

இவ்வாறு, தத்துவமேதை [illegible] தெரிவித்துள்ளார். கடந்த வாரம் அரச விருந்தினராக இலங்கைக்கு விஜயம் செய்து கொழும்பில் சிறப்புரைகள் ஆற்றிவரும் தத்துவமேதை திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தியை, ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் பேட்டிகண்டார். இப்பேட்டியின்போதே அவர்மேற்படிக் கருத்தை வெளியிட்டார்)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்காகவும், தொலைக்காட்சி நிறுவனத்துக்காகவும் திரு. கிருஷ்ணமூர்த்தியை அமைச்சர் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் பேட்டி கண்டிருந்தார்.

"யுத்தத்தின் மூலம் எந்தப் பிரச்னையையும் தீர்த்துவைக்க முடியாது என்பதை உலக நாடுகளின் தலைவர்கள் புரிந்து கொள்ள முடியாமலிருப்பதையிட்டு வேதனை அடையவேண்டியிருக்கிறது'' என்று கூறிய தத்துவஞானி;

''யுத்தம் ஒரு சாபக்கேடானது. தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினாலும், அதன்- பாவனையினாலும், நாடுகளுக்கிடையே பிளவுகள் இருக்கும்வரை நாம் யுத்தத்தை எதிர்நோக்கவேண்டியே இருக்கும்'' என்றார்.

"உலகியல் வாழ்க்கையிலிருந்து தப்புவதற்காக மக்கள் சிலமுறையிலான தியானத்தை நாடுகின்றார்களா?'' என்று ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் கேட்டபோது; ''வாழ்க்கையிலிருந்து தப்பித்துக்கொள்ள தியானமும் ஒரு வழியாகும்'' என்று தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தி பதிலளித்தார்.

-'மனிதனால் உருவாக்கப்பட்ட இந்தச்சமுதாயத்தை முற்றிலும் மாற்றிஅமைக்காவிட்டால்; சமுதாயம் ஒழுக்கநெறிகுறைந்து, ஊழல்நிறைந்துகாணப்படும். மதம் சம்பந்தப்பட்ட களியாட்டங்கள், ஏனையகேளிக்கைகளும் மலிந்துவிடும்'' என்று திரு. கிருஷ்ணமூர்த்தி எச்சரித்தார்.

## குற்றவியல் விசேட சட்டம் மேலும் 2 ஆண்டுகள் நீடிப்பு

(கொழும்பு)

மோசமான குற்றச்செயல்களில் ஈடுபட்ட சந்தேகநபர்களைப் பிணையில் விடாது தடுத்து வைக்கக்கூடிய குற்றவியல் நடைமுறைகள் விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலத்தை மேலும் 2 ஆண்டுகள் நீடிப்பதற்கான சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சகல நிலைகளிலும் நிறைவேறியது.

பதில் நீதிஅமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா இச்சட்டமூலத்திற்கான 2-வது வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மேலே கூறப்பட்ட சட்டமூலம் அமுலிலிருந்த காலப்பகுதியில் குற்றச் செயல்கள் குறைந்துள்ளன எனவே அச்சட்ட மூலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பது பலன்அளிக்கும் என்றார்.

### நல்லூர் சிவா கண்டனம்

இந்தச்சட்டத்தை அமுல் நடத்தும் அரசு நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாத்து வருகிறது என்று கூறிவருவது அர்த்தமற்றது என்று அவ்விவாதத்தில் பேசிய நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினார். (ம-இ)

## 300 ஈராக்கியர் பலி!

தெஹ்ரான் நவ.7

ஈராக்- ஈரான் போரில் நேற்று மேற்கு ஈரானில் நடைபெற்ற கொரில்லாச் சண்டையில் 300 ஈராக்கியர்கள் பலியானார்கள் என்று தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

உடனடியாகத் தேவை

பயிற்றப்பட்ட தாதிமார் (Trained Nurses) ஆஸ்பத்திரி உதவியாளர்கள்-ஆண் Attendants-Male) உடனடியாகத் தேவை.

சென்றல் நேர்ஸிங் ஹோம்
350, பலாலி வீதி திருநல்வேலி யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8225

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணுபாம், இணுவில். 7289

## தவறிவிட்டது

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த க. சோதிமலரின் கூப்பன் முத்திரை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. சோதிமலர், எஸ். வேலாயுதபிள்ளை மேற்பார்த்து, சுதுமலை வடக்கு, மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். 7282

கந்தையா அருணகிரிக்குச் சொந்தமான 82 ஸ்ரீ 4107- C. G. 125 ஹொண்டா மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ் ரக்ஸ்-லைசென்ஸ் பார்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அறிவிக்கவும். K. R. சுந்தரமூர்த்தி, நாதஸ்வரம், இணுவில் மேற்கு, இணுவில். 7285

## வடபிராந்திய போக்குவரத்துச்சபை

## கேள்வி விளம்பரம்

யாழ். பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி விளம்பர சேவையை நடாத்துவதற்கு பொதுமக்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விளம்பரசேவைக்குத் தேவையான உபகரணங்களைப் பொருத்துவதற்கும் பராமரிப்பதற்குமுரிய செலவினங்கள் யாவும் கேள்வி கோருபவராலேயே பொறுப்பேற்கப்பட வேண்டும்.

கேள்விகள்யாவும் ''விளம்பர சேவைக்கானகேள்விகள்' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்டஉறையில் தலைவர், கேள்விச்சபை, வடபிராந்திய போக்குவரத்துச்சபை, 165, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 1980-11-17ந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
வ. பி. போ. சபை.
165, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 7283

## நவீன வடிகால் திட்டம்

(மன்னர்)

மன்னர் பட்டினத்தில் நவீன வடிகால் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மன்னர் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னண்டோ மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம்மழை நீர் கடலுக்குச் செல்ல வழி பிறக்கும். இதனல் மன்னர் பட்டினத்தில் மழைநீர் தேங்கி நிற்காத நிலையும் ஏற்படும்.

### மாணவர் சுற்றுலா

(திருமலை)

கரவெட்டி மத்திய கல்லூரியினர் சுற்றுலா மேற்கொண்டு திருகோணமலைக்கு கடந்த வாரம் விஜயம் செய்தனர் இச்சுற்றுலாவில் 30க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்கள் இங்கு பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயம், கன்னியா வெந்நீர் ஊற்றுக்கிணறு, துறைமுகம் உலகிலேயே பெரிய மா ஆலையான பிமா ஆலை மற்றும் நகரில் உள்ள முக்கிய இடங்களையும்பார்வையிட்டனர் (கு)

# இன்றைய பலன்

ஐப்பசி மாசம் 23ம் திகதி
சனிக்கிழமை
(8-11-80)

மேடம்: குடும்பவாழக்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும், காதலர்களுக்கு இத்தினம் கற்கண்டு போல் இனிக்கும், பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு.

இடபம்; அரசபயத்திற்கு இடமுண்டு, வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம், சகோதர வழியால் சஞ்சலம் தோன்றும், நண்பர்களின் நச்சரிப்பு அதிகரிக்கும்.

மிதுனம்: இறைவழிபாடு மேலிடும், இதன்மூலம் இதயத்தில் அமைதியும் ஏற்படும், முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார், பிதாவழிச் சுகமும் உண்டு.

கடகம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல் தோன்றும், தொழில்துறையில் வெற்றி காணப்படும், விருந்தினர் வருகையால் இல்லத்தில் இனிமை தவழும்.

சிங்கம்: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பலவழிகளில் முயற்சி செய்வீர்கள், புதிய தொழில்துறையால் வருவாய் பெருகும், முன்னேற்றமான தினம்.

கன்னி: நடையில் தயக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும், உடல்நலன் சிறிது பாதிக்கப்படலாம்.

துலாம்: கவலையின் தாக்குதலால் வேதனைப் படுவீர்கள். அவசரப் போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் அடக்கி நடக்கவும், இறைநம்பிக்கை நன்று.

விருச்சிகம்; இன்சொல் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள், எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், சிறப்பான தினம்.

தனுசு: அன்னியர்களின் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், அவசரமுடிவின் மூலம் சில துன்பங்களும் தோன்றலாம், எதிரிகளின் சூழ்ச்சி மனதில் நிம்மதியைக் குலைக்கும்.


மகரம்: வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்பு கிடைக்கும், தாய்வழித் தனவரவிற்கும் இடமுண்டு, கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

கும்பம்: புதிய பாதை ஒன்று உங்களை எதிர்நோக்கியுள்ளது, புத்திரர்களால் மனதிற்குத் திருப்தி ஏற்படும், குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமுகமாய் இருக்கும்.

மீனம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும், உதவிசெய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வீர்கள், சிந்தித்து அமைதியாகச் செயலாற்றவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# பாங்கொக்கில் பயிற்சி பெறுவார்



(யாழ்ப்பாணம்)

யாழ். அமெச்சூர் விளையாட்டுச்சங்க தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் தாய்லாந்து, பாங்கொக்கில் நடத்தப்படும் விளையாட்டு பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக இலங்கை அமெச்சூர் விளையாட்டுச் சங்கத்தினல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கைக் குழுத்தலைவராகவே செல்கிறார்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவுடன் சர்வதேச அமெச்சூர் விளையாட்டுச் சம்மேளனம் இணைந்து நடாத்தும் இப்பயிற்சி நெறி இம்மாதம் 20திகதி ஆரம்பமாகிறது.

திரு. வி. ரி. சிவலிங்கம் வட மாகாணத்தின் ஒரு தலைசிறந்த விளையாட்டு வீரராவர் விளையாட்டு வீரர் குடும்பத்தில் பிறந்த இவர் வடமாகாணத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவித்து வருகின்றார்.

இவர் யாழ். அமெச்சூர் விளையாட்டுச் சங்கத்தின் தலைவராக கடந்த 8 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். இலங்கை அமெச்சூர் விளையாட்டுச் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவராகவும் இவர் அங்கத்துவம் வகிக்கிறார்.

இலங்கை விளையாட்டுத் தெரிவுக் குழுவிலும் இவர் அங்கத்தவராகவுள்ளார். இலங்கை அமெச்சூர் விளையாட்டுச் சங்கத்தின் ஒழுக்க நெறிக்குழுத் தலைவராகவுள்ள இவர் அச்சங்கத்தின் சிரேஷ்ட தகுதிபெற்ற மத்தியஸ்தருமாவார்.

இவர் யாழ் அமெச்சூர் உதைபந்தாட்ட சங்கத்தின்

(5ம் பக்கம் பார்க்க)

## விதைகிழங்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் விவசாய போதனாசிரியர் காரியாலயத்தில், விவசாயிகள் நன்மைகருதி, விதைஉருளைக் கிழங்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. விதைஉருளைக்கிழங்குக்கு விண்ணப்பம் செய்தோர், முழுப் பணத்தையும், நல்லூர் விவசாய போதனாசிரியர் காரியாலயத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறை ஐம்பது வீதம், உள்ளூர் விதைக்கிழங்கும், ஐம்பது வீதம் இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கும் விநியோகிக்கப்படுகிறது.


## யாழ். காந்தி சேவா சங்கம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கைத்தொழில் நிலையங்களில் பயிற்சி பெறவும் பணி புரியவும் விணணப்டங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 20-11-80-ந் திகதிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும். கைத்தொழில் அனுபவமும் பயிற்சியும் உள்ளவர்கட்கு முதலிடம் வழங்கப்படும்.

யாழ். காந்தி சேவா சங்கம்,
கதிரவேற்பிள்ளை வீதி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.
7287

## பட்டினசபை சங்கானை

நவீனசந்தையில்
1-ம் பகுதிக் கடைகளைக் கொடுப்பதற்கான

## கேள்வி அறிவித்தல்

சங்கானை பட்டினசபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின்மேற்குப்புறமாகப்புதிதாகக்கட்டப்பட்டநவீன சந்தைக் கட்டிட 1-ம் பகுதிக் கடைகளை குத்தகைக்குக் கொடுப்பதற்கான் அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் 10-12-80-ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னல் ஏற்றுக்கெள்ளப்படும். கேள்விப் பத்திரத்தினை உள்ளடக்கிய காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நவீன சந்தையின் 1-ம் பகுதிக் கடைகள் — சங்கானை'' எனக் குறிப்பிட்டு சங்கானைப் பட்டினசபையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும், அதே நேரத்தில் யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் இதன் பிரதியொன்று பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

| | மாதாந்த வாடகை | பத்திரப் பணம் | பிணைப் [illegible]ணம் |
|---|---|---|---|
| நவீன சந்தைக் கடைகள் 7 | 150/- (ஒன்றிற்கு) | 50/- | 200/- |

2. கேள்விகள் மீளளிக்கப்படாத பத்திரப்பணம் ரூபா 50/-ஐயும் மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணம் ரூபா 200/-ஐயும் செலுத்தியதின் மீதும் இச்சபையிடமிருந்து 5-12-80-ந் திகதி வெள்ளிக்கிழமை 3-00 மணி வரை பெற்றுக்கொண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.
3. கடை வழங்குதல் மாதாந்த வாடகைக்கு மேலாகக் கடையைப் பெறுவதற்காக கேட்கப்படும் கூடுதல் உரிமைப் பண அடிப்படையிலேயே அமையும். கூடியகேள்விகள் வரிசைக் கிரமப்படி ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி ஏற்றுக்கொள்ளப்படும் கடைக்காரர்களுக்கு அதே வரிசைக் கிரமப்படி அந்தந்த வகைக் கடைகளை தெரிவு செய்யும் உரிமை வழங்கப்படும்.
4. தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கடையில் சங்கானைச் சந்தையில் விற்கப்படும் மரக்கறி வகைகளையோ, இறைச்சி, மீன் போன்றவையையோ விற்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
5. சித்தி பெற்ற கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட அன்றைய திகதியிலிருந்து இரு வார காலத்துள் அவரது கேள்வியின் குறிக்கப்பட்ட உரிமைப் பணம் முழுவதையும் 3 மாத வாடகைக்கு சமமான தொகையை வைப்புப் பணமாகவும் செலுத்தி, கடையின் குத்தகைக்கு ஓர் உடன்படிக்கையில் ஒப்பமிடல் வேண்டும்.
6. 5-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எந்த நிபந்தனையையாவது பூர்த்தியாக்கத் தவறுபவர்களின் கேள்விப்பணம் பறிமுதல் செய்யப்படும். சித்தி பெற்ற கேள்விக்காரர் செலுத்தப்படும் உரிமைப்பணம் மீளளிக்கப்படமாட்டாததும் சபையின் வருமானத்திற்குரியதும் ஆகும்.
7. யாதொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையோ அல்லது எதனையுமோ ஏற்றுக்கொளளவோ அல்லது நிரகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு உரிமையுண்டு.
8. கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்டுவர்.
9. இதர விபரங்களையும், நிபந்தனைகளையும் அலுவலக நேரங்களில் இச்சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இராசா. தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
சங்கானைப் பட்டணம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
சாங்கானைப் பட்டணம்,
சங்கானை,
5-11-80. 7286

## தேவை

நல்ல முறையில் உபயோகிக்கப்பட்ட சிறியதும், நடுத்தரமானதுமான

## மோட்டார் வாகனங்கள்

கூட்டுத்தாபனமொன்று சிறியதும், நடுத்தரமானதுமான பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் நல்ல நிலைமையிலுள்ள மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்ய விரும்புகிறது. நன்கு பராமரிக்கப்பட்ட ஓரளவு புதிய வாகனங்களை விற்பனவு செய்ய விரும்பும் வாகனச் சொந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும்,

1. வாகனத்தின் வயது
2. வாகனத்தின் நிலைமை
3. செயலாற்றிய தூரம்
4. எதிர்பார்க்கும் விலை

ஆகிய விபரங்களுடன்
15-11-1980-ந் திகதிக்கு முன்
விளம்பர இல. 7284, ''ஈழநாடு'' மேற்பார்த்து,
யாழ்ப்பாணம்
என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.
7284


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்பாடுகளிலிருந்து வழுவாது தொடர்ந்து சேவை

## அஞ்சல் எழுதுவினைஞர்சங்க ஆண்டுக்கூட்டத்தில் தலைவர்

(யாழ்ப்பாணம்)

"1956ம் ஆண்டு சிங்களம் இந்நாட்டில் ஆட்சிமொழியாக்கப்பட்டமை பெரும்பான்மை, சிறுபான்மையினர் விரோதத்தையும் நிர்வாகச்சீர்கேட்டையும் கொண்டுவந்தது. இக்காலகட்டத்தில்தான் மொழி வழிபிரிந்து நாம் தனிச்சங்கம் அமைத்தோம். எமது சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்கும் என்றே நம்புகிறோம். 1961ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதி மலர்ந்த எமது சங்கம் பல இன்னல்களுக்கும் இடர்களுக்குமிடையிலே அதன் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலுமிருந்து வழுவாது பத்தொன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்தும் சேவையாற்றி வருகிறது"

இவ்வாறு யாழ்ப்பாணம் பொதுசனநூல்நிலைய சாம் சபாபதி மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 19வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. இராசா பேசுகையில் தெரிவித்தார்.

இப் பொதுக்கூட்டத்தில் சிறப்புவிருந்தினர்களாக யாழ் பிரதேச அஞ்சல்தொடர்பு அத்தியட்சகர் திரு. ஏ. பாலசிங்கம், யாழ் அஞ்சல்நிலைய பிரதமதபாலதிபர் திரு. தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரைகளை வழங்கினர்கள்.

தபால் அத்தியட்சகர் திரு. ஏ. பாலசிங்கம் பேசுகையில், கடந்த 15 ஆண்டுகாலமாக நான் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட்டுவருகிறேன். அஞ்சல் திணைக்களமும் தொலைத்தொடர்புத் திணைக்களமும் இரண்டாகப் பிரியும் பட்சத்தில் அஞ்சல்எழுதுவினைஞர்களை அஞ்சல் அதிபர்களுடன் ஒருங்கிணைப்பதற்கான முயற்சியை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். 1967ல் இப்படியான ஒரு முயற்சியை நான் மேற்கொண்டேன்" என்றார்.

நடப்புவருட நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். எந்த ஒரு பதவிக்கும் போட்டி இடம் பெறுதமை தொழிலாளர்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டியது.

தலைவர்: திரு. சி. இராசா, உபதலைவா திரு. செ. மதியாபரணம், செயலாளர்: திரு. செ. அருச்சுனு, உதவிச்செயலாளர் திரு. த. ஞானேஸ்வரன், பொருளாளர்: திரு. அ. சண்முகநாதன், உதவிப் பொருளாளர்: செல்வி க. செல்வேந்திராணி, நிர்வாகக் குழுவில் திருவாளர்கள்; க. துரைசிங்கம், ஜி. பாஸ்கரகுமார், க. பதுமநாதன், சி. நடராசா, கி. ஆறுமுகம், கோ, குணபாலசிங்கம், வ. நடராசா, செல்விகள் மா. அரியரட்ணம், ந. தியாகராஜா, திருமதி கலா ஜெயசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அஞ்சல்ஒலி ஆசிரியராக திரு. வெ. தருமலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

# நிரந்தரக் கட்டிடங்கள் அமைக்கத் தடை!

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புலோப்பளை என்னுமிடத்தில் கடற்கரையிலிருந்து அரைமைல் எல்லைக்குள் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படக் கூடாதென பொதுமக்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. இப்பணிப்பினை புலோப்பளை கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு கு கிட்ணர் விடுத்துள்ளார்.

# "இந்தியாவுடன் சீன நட்புறவை விரும்புகிறது"

-- சீனப்பிரதமர்

பீக்கிங், நவ, 5

"இந்தியாவுடன் சீன நட்புறவைகொள்ளவிரும்புகின்றது, இந்தியாவும், சீனவும் விவசாய, தொழில்நுட்பத் துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்".

இவ்வாறு சீனவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய விவசாய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திரசிங்கைவரவேற்றுப் பேசுகையில் சீனவின் பிரதமர் கூறினர்.

இவ்வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசிய இந்திய விவசாய அமைச்சர் திரு. பிரேந்தி சிங், சீன உட்பட சகல அயல் நாடுகளுடனும் இந்தியா நட்புறவுடனிருக்கவே விரும்புகிறதென்றார்.

(வெ)

# விபத்து மரணம்

(வவுணதீவு)

கூரை வேய்வதற்காக வீட்டின் மீது ஏறிய ராமன் பாக்கியம் என்பவர் தவறி வீழ்ந்து மரணமான சம்பவமொன்று கித்துள் என்னும் இடத்தில் நடந்துள்ளது.

மரணவிசாரணை முடிவில் விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

(க)

# மாவட்ட அபிவிருத்தி சபைக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 19வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் செயற்குழுவினுல் முன்மொழியப்பட்டுப் பொச்சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

"இத்தேசத்தின் முன்னேற்றத்திற்கும் நலனுக்கும், ஒற்றுமைக்கும் நீண்டகாலமாகத் தேவைப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியமைக்கு மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் சங்கம் ஏகமனதாக நன்றி கூறுகிறது".

"19 0 ஜூலை மாதத்திலிருந்து வேலைநிறுத்தத்திலுள்ள சகல ஊழியர்களையும் மேலும் காலதமதப்படுத்தாது நிபந்தனைகளின்றி வேலைக்கெடுத்து அவர்களில் தங்கியிருப்பவர்களின் கஷ்டங்களையும் இடர்களையும் பெருமனதுடன் தீர்க்குமாறு சங்கம் மேன்மை தங்கிய ஜனாதிபதியையும் அமைச்சரவை உறுப்பினர்களையும் ஏகமனதாகக் கேட்டுக்கொள்கிறது.

"பிரதேச அலுவலகங்களில் கடமையாற்றும் அஞ்சல் தொலைத் தொடர்பு ஊழியர்கள், வீடுவசதியின்றிக்கஷ்டப்படுவதால் இவர்க்ளுகான குடிமனைகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சரைச் சங்கம் ஏகமனதாகக் கேட்டுக்கொள்கிறது".

## மதிப்பீடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மறை மாவட்டத்தில் கடந்த மாதம் 25ம் திகதி நடைபெற்ற மறைக் கல்விப் பரீட்சை விடைத்தாள்கள் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினரால் இன்றும் நாளையும் மதிப்பீடு செய்யப்படும்.

கட்டடைவேலி, நெல்லியடி

# ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தம்!

(நெல்லியடி)

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகலதரப்பு ஊழியர்களும் கடந்த திங்கட்கிழமை திடீர் வேலைநிறுத்தம் செய்திருந்தனர்.

இச்சங்கத்தின் ஊழியரொருவர் வெளியார் ஒருவரினுல் தாக்கப்பட்டதின் எதிரொலியாகவே இவ் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் நெல்லியடி பிரிவுத் தலைவர் திரு. கே. சிவபாதம் தெரிவித்தார்.

ப. நோ. கூ. சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போது பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. சிறீதரன் கலந்துகொண்டு சந்தேக நபர்மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். பொலிஸ் அதிகாரியின் உறுதி மொழியை ஏற்ற ஊழியா சங்கத் தலைவர்கள் சகல ஊழியர்களையும் பொது மக்கள் நலன் கருதி கடமைக்கு செல்லுமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து இவ் வேலைநிறுத்தம் [illegible]டது.


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

· மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்.

## ஒருவருட வைப்புத் திட்டங்கள்

| | |
|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% |
| முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருட வைப்புத் திட்டங்கள்

| | மாதாந்தம் செலுத்தப்படுவது | முதிர்ச்சியின் பின்னா செலுத்தப்படுவது |
|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/- ற்கும் கீழ் | 22% | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | 27% |

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19
கிளைகள்: யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி 2466
அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்தை, தொலைபேசி 534
கண்டி 901/A பேராதனை வீதி, தொலைபேசி 4196
செயற் துணைவர்கள் (ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

அயராத உழைப்பும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமேவாழ்க்கையைப் பயனுள்ளதாகவும் புகழ்நிறைந்ததாகவும் மிளிரச்செய்பவை என்பது மிகையாகாது

—ஹாமில்டன்.

# நமது நோக்கு

## அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி

"தொல்லைகளைக் கண்டு அஞ்சமாட்டேன்" என்று துணிவாக அமெரிக்க மக்களை தட்டி எழுப்பிய புதிய ஜனாதிபதி றீகனுக்கு முனிவரின் வாக்கியம் தெரிந்திருந்தால்—

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வ தஃகொப்பதில்" என்று கட்டாயமாக மொழிந்திருப்பார்.

நாடகமாகிய உலகத்தில் நாளை என்ன நடக்கும் என்பது தெரியாத மக்களுக்கு புதிய ஜனாதிபதி றீகன் உலகமே எதிர்பாராத பெருவெற்றி ஈட்டியதில் என்ன அதிசயம்?

இன்றைய உலகம் ஒரே நாடகமாக தொழிற்படுவது; மகாகவி ஷேக்ஸ்பியரின் அதிஅற்புத புலமைக்குச் சான்றுபகரும்.

உண்மையில் ஒரு நடிகனே உலகில் மிகப்பெருமை வாய்ந்த ஜனநாயக தேசத்திற்குத் தலைமை தாங்குவதானால் புலவனின் கூற்றை நாம் ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மலைபோல்வரும் துன்பங்களைத் தலைமேற்தாங்கும் சக்தி ஒரு நடிகனுக்குத் தேவையானால், அவன் எந்தக் கட்டத்திலும் மக்களைச் சிரிக்கவைக்கும் ஆற்றல் பெற்றவனாகத் திகழவேண்டும். ஜனாதிபதி றீகன் இந்த ஆற்றல்நிறைந்த பேர்வழி.

இருமுறை தேர்தலில் குதிக்க எத்தனித்தபோதும் வெற்றிகாணாதவர் மூன்றாவது முறை குடியரசுக்கட்சியின் வேட்பாளராக நியமனம் பெற்றதுமல்லாமல் சரித்திரப் பிரசித்தி பெற்ற வெற்றியையும் ஈட்டிஉள்ளார்.

அவருடைய வெற்றி எவ்வகையில் பிரமாதமானது?

பிற்போக்கான குடிபோன, வரட்டுச் சித்தாந்தம்பேசும் கான்சர்வேட்டிவ் கட்சி என்று பொதுமக்களால் ஒதுக்கப்பட்ட கட்சியின் வேட்பாளராக, அதுவும் தீவிர வலதுசாரிக்கட்சித் தலைவனாக நியமனம் பெற்றார்; ஆட்சியில் நான்கு வருடம் இருந்த ஜனாதிபதி ஒருவரை, சுமார் நூறு வருடங்களுக்குப்பின் தோற்கடித்தவர் இவரே! ஆட்சியில் இருந்த ஜிம்மி காட்டர் பொதுஜன அபிப்பிராயத்தில் தோல்வி காண்கிறார் என்ற போதும், அவர் இறுதி நேரத்தில் வெற்றி பெறுவார் என்பதே உலக நம்பிக்கையாக இருந்தது. அவரும் இவ்வாறு நம்பியிருந்தார் என்பது சொல்லாமலே புரியும் இருந்தும் அமெரிக்க தேர்தல் சரித்திரத்தில், தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த சம்பவம் வாக்களிப்பு முடிவதற்கு பல மணித்தியாலங்களுக்கு முன் நிகழ்ந்தது இதுவே முதன் முறையாகும்.

இதனை நாம் விபரீத நோக்கம் என்ன? உலகிலே மிகப்பெரிய அதிர்ச்சி ஊட்டிய வெற்றியின் இரகசியத்தை நாம் புரியவேண்டியது அவசியம்.

எமதுநாட்டிலுமே ஜனாதிபதி ஆட்சிமுறை செயற்படத் தொடங்கிவிட்டது. அது முற்றிலுமே அமெரிக்க முறையை அடிப்படையாகக் கொள்ளாவிட்டாலும், நிர்வாக அதிகாரம் படைத்த ஜனாதிபதி ஜனநாயக ஆட்சியில் நிலவும் பலவீனத்துக்கு ஒரு மாற்றுமருந்து என்ற காரணங்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அண்டை நாடாகிய இந்தியாவிலும் பாராளுமன்றமுறையும் அதன் எதிர்க்கட்சியின் தொல்லைகளும் இந்தியப் பிரதமர் இந்திராவுக்குத் தாங்கமுடியாத நெருக்கடிகளைக் கொடுத்துவருகின்றன. எனவே ஒரு புதிய ஜனாதிபதி ஆட்சிமுறையை அவர் விரும்புவதாகவும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ஆட்சிமுறை நூற்றாண்டு காலமாக பலம் வாய்ந்ததாக இருந்தபோதும், மக்களின் தீர்ப்புக்குத் தலைவணங்க வேண்டியதொன்று என்பதை இத்தடவை நாம், ஏன் அகில உலகும் நன்றாகப் புரிந்துகொள்ளமுடிகிறது.

எந்த ஒரு தனிமனிதனுக்குமில்லாத அதிகாரம் படைத்த ஜிம்மி காட்டர் கடந்த நான்கு வருடங்களில் நிலைநாட்டிய சாதனை என்ன? ஆட்சியில் இருந்தவராகையால் அவருடைய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை நாம் அனுதாபக் கண்கொண்டு நோக்கினோம்; மிகமோசமான ஒருவரைத்தவிர, வேறொருபோதும் ஒருமுறை ஆட்சியிலிருந்தவரை மறுமுறை கலைத்துவிட அமெரிக்க மக்கள் துணியமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

முடிவை விளக்குங்கால் ஜனாதிபதி காட்டரின் ஆட்சியில் பொதுமக்கள் எவ்வளவு தூரம் ஆத்திரங்கொண்டிருந்தார்கள் என்பது அவருடைய கோட்டைகள் அனைத்தும் தகர்க்கப்பட்டதில் இருந்து புலனாகும்.

'உள்நாட்டில் பணவீக்கம் தொழிற்குறைவு, வேலையின்மை; வெளியுலகில் அமெரிக்கா பரிகாசத்துக்குரிய தேசமாகிவருதல், எங்கும் ரஷ்யா அதன் கம்யூனிசமும்பரவுவது அமெரிக்க சுதந்திர வாழ்வு பறிபோவது இந்த உள்ளக்கிடக்கை வளர்ந்து வந்த சூழ்நிலையை 'நடிகர் திலகம்' றீகன் பயன்படுத்தினாரென்றால் அதில் வியப்பென்ன?

அதனை உணரமுடியாத நாம், ஆட்சிமுறையில் மாற்றம் காண்பதால் என்ன பயன்? அமெரிக்காவின் ஜனாதிபதியென்றால் என்ன; பிரிட்டனின் பிரதமர் என்றால் என்ன; மக்கள் அந்நாட்டு மன்னரின் விருப்பு வெறுப்புக்குக் கட்டுப்பட்டவர்களே!

# முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் கௌரவிக்கும் மூவர்

இன்று முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், ஈழத்தின் பெருமைமிக்க மூவர் பெருமக்களைக் கௌரவிக்கும் வகையில், கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலத்தில் வைபவம் ஒன்றினை ஒழுங்குசெய்துள்ளது. நாடக வித்தகர் கலையரசு க. சொர்ணலிங்கம், இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர், சொல்லின் செல்வன் இ. பகாதேவா (தேவன்) ஆகியோரே இம்மூவருமாவர்.

தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்த உலகில் வாழ்வதே ஒரு மகத்தான சாதனைதான். இந்த வாழ்நாளிலே விபரந் தெரியத்தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை நாடகத்தையே உயிர்மூச்சாகக்கொண்டு கனவும் நனவும் நாடகமாகவே வாழ்வது அதனிலும் பெரிய சாதனை. இச்

'சொக்கன்'

(சேலை[illegible] மு.வெ. கழகம்)

சாதனையைப் புரிந்த கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்கள் ஈழத்துத் தமிழ்நாடகக் கலைக்குப் பிதாமகர் என்பதில் யாருக்கும் ஐயம் இருத்தல் இயலாது. அன்னார் அண்மையிலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் 'நாடக வித்தகர்' என்ற கௌரவப்பட்டம் அளிக்கப்பட்டது பொருத்தமே.

ஈழத்திலே மரபுவழி வந்த தமிழ்ப் பேரறிஞர்களின் வரிசையில் இன்று பேரிடம் வகிப்பவர்கள் ஒருசிலரே. அந்தச் [illegible] இலக்கணக் கடலின் ஆழங்கண்ட வித்தகர் இ. நமசிவாயதேசிகர் ஒருவரே என்பதில் யாருக்கும் ஐயம் இராது. "தாம் உண்டு தம் படிப்புண்டு" என்று இருந்துவிடாமல் முதிய வயதிலும் சமூகப்பணியாற்றிவருபவர் தேசிகர்ஐயா அவர்கள். இச்சேவைக்கு நிலைத்த நினைவுச் சின்னம் அவர்பெற்ற சமாதான நீதிபதிப்பட்டம். அழகினுக்கு அழகு செய்வதுபோல இடபேரறிஞா பெருந்தகையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினர் இலக்கண வித்தகர்' என்ற பட்டத்தினால் அணி செய்துள்ளனர். இச்செயல் பெரிதும் பாராட்டத்தக்கது.

எந்தத் துறையிலும் ஆழ்ந்த திறமை, சுதந்திர மனப்போக்குடன் இணைந்த அசாதாரணமான தன்னம்பிக்கை ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் சரளமாகவும் காத்திரமாகவும் பேசவும் எழுதவும்வல்ல ஆற்றல், குத்தலும் நையாண்டியும், நறுக்கும், வேசமும், ஒசைநயமும் அமைந்த நாவன்மை. மொழி பெயர்ப்புக்கு ஒரு மன்னன் அந்த மன்னன்தான் தேவன். 'சொல்லின் செல்வன்' என்று இலங்கைக் கம்பன் கழகம் அவரைப் பாராட்டிக் கௌரவித்தமை எம்மனோர்க்கு மிகுந்த மகிழ்ச்சி தந்தது.

இம்மூவரையும் முத்தமிழ் வெளியீட்டுக் கழகமும் கௌரவித்துத் தானுங் கௌரவம் பெற எடுத்த முயற்சியே இன்றையவிழா. இவ்விழா இவ்விழாவோடு இணைதாகப் புலவர் ம. பார்வதிநாதசிவத்தின் 'இருவேறு உலகம்' கவிதைநூல் அறிமுகம், திருவாட்டி ம. சண்முகதாசன் சி. வை. தாமோதரம்பிள்ளை பற்றிய ஆய்வேடு வாசிப்பும் இடம்பெற்றுகின்றன,

பல இடர்ப்பாடுகளுக்கிடையே அய்வுநூல் வெளியீட்டுப்பணியிலே தளராது ஈடுபட்டுழைக்கும் மு. வெ. சழகத்தின் இவ்விழாவிற் பெருந்தொகையான தமிழ் ஆர்வலர்கள் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மக்கள் கருத்து

## நிவாரணம் அளிக்காத பட்ஜட்

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. றொனி டிமெல் இவ்வாரம் சமர்ப்பித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் நான்காவது வரவு செலவுத் திட்டம்; மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமாகத் தெரியவில்லை.

சாதாரண வகுப்பினருக்கோ குடும்பங்களுக்கோ இத்திட்டத்தினால் பளு அதிகரிக்கின்றதேதவிர; எதுவித நன்மையும் இல்லை. எவ்வகையிலும் நிவாரணமும் கிடைக்கவில்லை.

அதிகப்படி, எழுபது ரூபா அலவன்ஸைப்பெறுத்தவரை! அமைச்சரின் யோசனையின் படி, அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியருக்கே இச்சம்பள உயர்வு கிடைக்குமே தவிர நாட்டின் முதுகெலும்பான தனியார் துறை ஊழியரை அமைச்சர் மறந்துவிட்டார் போலும்!

தனியார் துறையினரின் சம்பள உயர்வு பற்றிச் சொல்ல மறந்த அமைச்சர் தனியார் துறை ஊழியரிடமிருந்து மேலும் இரண்டு வீதம் சேமலாப நிதியை வசூலிக்கத் தீர்மானித்துவிட்டார்! வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து கொண்டேபோகும் இவ்வேளையில்; எதுவித சலுகையும் அளிக்காமல் மேலும் இரண்டு சத வீதத்தை தனியார் துறை ஊழியரிடமிருந்து அறவிட்டு அவர்களின் பளுவை அதிகரிக்கச் செய்யும் அமைச்சர்; சேமலாப நிதியின் வட்டி விகிதத்தையாவது அதிகரித்து இருக்க வேண்டும். ஆனால் அமைச்சரோ இது விஷயத்தில் மௌனம் சாதித்துவிட்டார்.

நெல்லின் உத்தரவாத விலையை ஐம்பது ரூபாவாக உயர்த்தி சமக்காரருக்குச் சலுகையளித்தது நன்மையளிக்கும் விஷயம் என்றாலும், இதனால் பாவனையாளருக்குக் கஷ்டம் தான்! அரிசியின் விலை உயர்ந்துவிட்டது!. இதனால் சாதாரண மக்களுக்கு கஷ்டம் அதிகரித்திருக்கிறதே அன்றி ஒருவித நன்மையும் கிடைக்கவில்லை. உள்நாட்டு [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

## 'இருவேறு உலகம்'' தொகுதிக்கு பண்டிதமணி வாழ்த்து

"இரு வேறு உலகம்" என்ற குறுங்காவியத்தில் சோகமே உருவாய், சோகத்தில் முழுகி, ஒருவாறு தேறி, உயிர்வாழும், காவியநாயகியை வாழ்த்திவிட்டு மீளும்போது,

என்பால் வேறு இரு உலகங்கள் மூளைகொண்டு எழுந்தன:- ஒன்று இலக்கியரசனை உலகு, மற்றையது சமயதத்துவ உலகு.

இலக்கியரசனை உலகுக்கு திரு. வே. மகாலிங்கசிவம் என்று பெயர். சமயதத்துவ உலகுக்கு உபஅதிபர் திரு. பொ. கைலாசபதி என்று பெயர் இருவரும் இருபெருங் கற்பக தருக்கள்.

சந்தனமரங்களுக்கு அண்மையில் நின்ற குற்றத்துக்குத் தண்டனையாக, சாதாரண மரமொன்றில், சந்தன நறுமணம் வருகிறதென்றால், அந்தமரம் 'ஆம்' என்று தலையசைக்குமா? தலைகுனியுமா? அம்மரத்தின் நிலை என்னாகும்!

சில சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட கற்பகதருக்களை நினைவு கூர்ந்து தலைகுனிந்து, நிலத்தை நோக்கும் நிலை என்பால் நிலைப்பதுண்டு.

புலவர் பார்வதிநாதசிவம், பச்சைப் பசிய பாலப் பருவத்தில் பலதுறைப்பட்ட புலமையின் குவியலான, அருமைத் தந்தையாரை நேரில் அநுபவியாது பிரியநேர்ந்தது, புலமையுலகின் தவக்குறைவே யாயினும் 'கல்லாமற் பாதி குலவித்தை' என்றபழமொழியை, நினைவுகூரும் முறையில், சிவம் கவிமழை பொழிந்துவருகிறார்.

புலவர் திரு. ம. பார்வதிநாதசிவத்தின் கவித்துவம் வாழ்க; வளர்க. வணக்கம்.

இன்று கந்தசஷ்டி விரதாரம்பம்

## ஆறுநாள் நோன்பிருந்து உறுபகை அகற்றுவோம

-- இ. சரவணபவன் --

சைவ சமய புண்ணிய காலங்களில் கந்தசஷ்டியும் ஒன்றாகும். சஷ்டி என்பது ஒருதிதி. ஐப்பசி மாதத்திலே அமாவாசைக்குப் பின்வரும் பிரதமை முதல் ஆறுதினங்கள் கந்தசுவாமியாரைக் குறித்து அநுட்டிக்கப்படுவது கந்தசஷ்டியாகும். சுப்பிரமணியர் சஷ்டி விரதமெனவும் படும், சுப்பிரமணியர் சூரனைச் சங்கரித்து அவனுக்கும் யாவர்க்கும் அருள்புரிந்த தினம் சஷ்டி.

"சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்" என்பார்கள். சங்கரன்-சிவன்; சட்டி-திதி, மாறுவத்தல் - மாமரமாகநின்ற சூரனைச் சங்கரித்தல், சூரன்போர், சூரசங்காரமெனவும் இந்நாள் வழங்கப்படும்.

தேவர்கள் துயரந் தீர்த்தற் பொருட்டுச் சுப்பிரமணியப் பெருமான் சூரனோடு போர் தொடங்கி ஆறாவது நாள் அவனைத் தமது வேலாயுதத்தினால் பிளந்து கொன்றார் பிளவுபட்ட கூறுகள் அவரருளினால் மயிலும் சேவலுமாக வர அவற்றை வாகனமுங் கொடியுமாகக் கொண்டருளினார். சூரனால் துயரடைந்த தேவர்கள் முதலானோர் அவ்வாறு தினங்களும் எம்பெருமானைப் போற்றித் துதித்து நற்பேறடைந்தனர். இவ்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கதிரேசன் கோவிலில் கந்தர் ஷஷ்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் இன்று சனிக்கிழமை தொடக்கம் கந்தர் ஷஷ்டித் திருவிழா நடைபெறும். தினந்தோறும் காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதனையும் தொடர்ந்து திருச்செந்தூர்ப் புராணபடனமும் நிகழும். மாலை சந்தனக் காப்பு அலங்காரத்தோடு ஆறுமுக அர்ச்சனை நடைபெறும். இரவு 7 மணி தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தமிழ் விரிவுரையாளர் திரு.சி.குமாரசுவாமி "கந்தரனுபூதி" பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். இரவு திருவுலா.

கந்தர் ஷஷ்டி விரதம் அனுட்டிக்கும் அடியார்கள் கோவிலில் தங்கியிருந்து வழிபாடாற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதி அமைச்சர் நிகழ்த்திய பட்ஜட் உரை:

# "எமது நிலை அலைகடல் துரும்பாக இன்று இருக்கிறது!

## அரசியல் எதிரிகளின் கண்டனம் நியாயமற்றது"

ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தின் நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல், தனது நான்காவது வரவு-செலவுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்.

கடந்த மாதம் 28ம் திகதி சபையில் சமர்ப்பித்த மதிப்பீடுகளின்படி 1559 கோடியாகவிருந்த அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகையை தனது வரவுசெலவுத்திட்ட உரையின்போது 1492 கோடி ரூபாவாகக் குறைத்த நிதியமைச்சர்; அதனையும் சமாளிப்பதற்கான தனது வழிவகைகளைக் கூறியுள்ளார்.

### வழமைக்கு மாறாக...

எதிர்பார்க்கப்பட்ட விதத்திலேயே பொதுமக்கள் மீது புதிதாக சுமைகள் எதனையும் இந்த 'பட்ஜட்டில்', அமைச்சர் சுமத்தாவிட்டாலும், முதல் நாள் அறிவிக்கப்பட்ட போக்குவரத்துக்கட்டண அதிகரிப்பும், பால்விலை ஏற்றமும் பொதுமக்களை இந்த பட்ஜட் மீது ஓர் 'ஏக்கமான பார்வையைத் தூண்டியது.

வழமைக்கு மாறாக, அமைச்சரின் உரைகூட அன்று உற்சாகமாக இருக்கவில்லை. வழக்கமான அவரது உரையில் செறிந்துகாணப்படும் அறிஞர்களின் மேற்கோள்கள் அதிகமாக இல்லை; அவ்வாறே கடந்த அரசாங்கம் மீதான கண்டனமும் அதிகமாக இல்லை. அவரின் நீண்ட உரைக்கு வசதியளிப்பதற்காக சபை அதன் வழமையான அமர்வுநேரத்தைவிட ஒரு மணி நேரம் முன்னதாகவே கூடிய போது, அமைச்சர் தனது உரையில் கணிசமான பகுதியை சபாபீடத்தில்சமர்ப்பித்தார்! இதனால் எதிர்பார்த்ததைவிட வெகு முன்னதாகவே, ஒருமணிநேர தேநீர் இடைவேளையுடன், மாலை 5-45 மணிக்கு அமைச்சர் தனது உரையை முடிக்கவும், சபை ஒத்திவைக்கப்பட்டது,

### முதல்தடவை

நிதியமைச்சர் ஒருவர் தனது வரவுசெலவுத்திட்ட உரையின் ஒரு பகுதியை சபாபீடத்தில் சமர்ப்பித்தது இதுவே முதல் தடவை என்று கூறப்படும்

அதேநேரத்தில் இந் நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சிகள் அதிருப்திகொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

பி. ப. 2 மணிக்கு சபை ஆரம்ப மணி ஒலித்து ஓய்ந்ததும், வைபவகால உடை-அணிகளுடன், துணைப் படைக்கலச்சேவிதர் சபாநாயகர் வருகையைத் தெரிவித்து கட்டியம் கூற, படைக்களச் சேவிதர் ரொனி அபேசிங்க செங்கோலைத் தாங்கி முன்னே வர சபாநாயகர் சபைக்குள் பிரவேசித்தார் உறுப்பினர்கள் தூயவெண்ணிற ஆடைகளுடன் காட்சி தந்தனர்.

சபை அதன் வழமையான அலுவல்களை முடித்துக்கொண்டதும் சபாநாயகர், ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான (பட்ஜட்) உரையை நிகழ்த்த நிதியமைச்சரை அழைக்கவும், வடபுறவாயில்வழியே நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் தன்னுடைய 'பட்ஜட் இரகசியங்கள்' அடங்கிய அந்த பாரம்பரியபெட்டியுடன் சபையுள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

அமைச்சரின் வருகையை முதன்முதலில் அவதானித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் நல்லூர் உறுப்பினர் திரு. சிவசிதம்பரமும் கரகோஷத்தை ஆரம்பிக்க சகலரின் பார்வையும் உட்புறவாயிலை நோக்கியது; கரகோஷம் சபையை நிறைத்தது!

### நான்காவது பட்ஜட்

சம்பிரதாயபூர்வமான இக் கரகோஷத்துடன் பி. ப. 2-05 மணிக்கு நிதியமைச்சர் தனது 4வது வரவு செலவுத்திட்ட உரையை ஆரம்பித்தவேளை பிரதமரின் ஆசனம் உட்பட, அரசாங்க முதலாம் இரண்டாம் வரிசைகளில் பல ஆசனங்கள் வெறுமையாக காணப்பட்டது. பத்திரிகையாளர்களின் கவனத்தை ஈர்ப்பதாகவிருந்தது. பின்னர், 2 16க்கு பிரதமர் சபைக்குள் வந்தார். ஏனைய அமைச்சர்களும் பின்னர் வந்தார்கள்.

"இந்த அரசாங்கம் அதன் பதவிககாலத்தில் அரைவாசியைப் பூர்த்திசெய்துள்ள இச் சந்தர்ப்பம்தான் எம்முடைய சாதனைகளைக் கணக்கெடுப்பதற்கும் பலவீனங்களை அறிந்து குறைபாடுகளைச் சீர்திருத்தவும் லட்சியங்களை அடைவதற்கு புதுப்பலத்துடனும், திடசங்கற்பத்துடலும் முன்னேறிச் செல்வதற்கும் ஏற்றது'' என்று குறிப்பிட்ட நிதியமைச்சர்; ஓர் ''அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அணி திரண்டு தங்கள் ஆட்சேபனையைத் தெரிவிக்கப்போது மான இக்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் எதுவுமே நேராமை அரசின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் அதன் கொள்கைகளுக்கும் சாதனைகளுக்குமான அவர்களின் பாராட்டையுமே தெரிவிக்கின்றன'' என்றார்

தன்னுடைய கடந்த மூன்று பட்ஜட் நடவடிக்கைகளைப் பற்றி; அவற்றின் பலன்களைப் பற்றி அமைச்சர் பெருமிதமே கொண்டாலும்; அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சந்தேகத்துக்கு இடமின்றி மக்களின்மீது கஷ்டங்களைச் சுமத்தியேயிருக்கின்றன என்ற கவலையையும் அவர் கொண்டிருந்தார்.

### அலைகடல் துரும்பாக..

நீண்டகால, நிலையான பொருளாதார நலன்களின் அடிப்படையில், அவை நிலையற்றவையும் தவிர்க்கமுடியாதவையும் என்று சமாதானமும் சொன்ன அமைச்சர்; தம்முடைய நிலைமை 'இரு தலைக் கொள்ளி எறும்பாக-அலைகடல் துரும்பாக' இருக்கிறது என்றும் கூறினர். பண வீக்கத்தைக் கட்டவிழ்த்து விடாமல் எவ்வாறு முழுமையான தொழில்வசதியை ஏற்படுத்தலாம் என்பதுதான் இந்த நிலை!

தமது பொருளாதாரக் கொள்கைகளில் சர்வதேச சமூகம் கொண்ட நம்பிக்கையின் காரணமாக, வேறு எந்தவொரு மூன்றும் உலக நாட்டையும் விட கூடுதல் வெளிநாட்டு உதவியைக் கடந்த ஆண்டு காலப்பகுதியில் தாம் பெற்றுள்ளதாக பெருமையோடு கூறிய அமைச்சர்; எதிர்கால நிலைமைகளில் 'சிவப்புவிளக்கையே' காண்பித்தார்.

-- மாலி --

"வெளிநாட்டு உதவிக்கான எதிர்கால வாய்ப்பு நாளுக்கு நாள் மங்கிக்கொண்டே வருகிறது; கொடை வழங்கும் பல நாடுகளே கடுமையான பொருளாதார இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றன. எமதுமக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அபிவிருத்தித் திட்டங்கள்தான் முக்கியமானவை'' என்று அமைச்சர் ரொனி கவலை தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தித்திட்டங்களை செலவைக்கணக்கிடாது தொடர்ந்து செயற்படுத்துவனல் பணவீக்கம் ஏற்படும்; திட்டத்யைச் சுருக்கினுல் தொழில்வாய்ப்பு குன்றிவிடும். இதுதான் அமைச்சருக்குள்ள சிக்கலான நிலைமை!

இந்த நிலைமையில், "அரசாங்கமானது தேவையற்ற செலவினத்தைக் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும்எடுக்கவேண்டும்'' என்று நிதியமைச்சர் வலியுறுத்தினர்.

"தேவையற்ற செலவினத்தைக் குறைத்து' வீண்விரயத்தைத் தவிர்த்து, கிடைக்கத்தக்க வளங்களை திறமையாகப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை என்னல் குறிப்பிடாமலிருக்கமுடியாது''என்றுதனது அரசாங்கத்துக்கே ஆலோசனை கூறிய அமைச்சர், நடப்புஆண்டில் வரவு-செலவுத்திட்டத்துக்குப் புறம்பாக 560கோடி ரூபா குறைநிரப்பு தொகையாக அமைச்சுக்களினுல்பெறப்பட்டிருக்கிறது என்றுர். இது; வரவு-செலவுத்திட்ட பற்றுக் குறையின் 60சத வீதத்துக்கும் அதிகமானதாகும்!

### அமைச்சர் நம்பிக்கை

இதனைக் குறிப்பிட்டஅமைச்சர்; அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவை சிறப்பாகத் திட்டமிட்டு நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தினுல் இக்கஷ்டகாலத்தில் எமது பணியினை அது சிரமம் குறைந்ததாக ஆக்கும் என்று கூறி, அடுத்தஆண்டில் குறை நிரப்பு தொகைகள் எதனையும் சமர்ப்பிப்பதில்லை என்று தனது அமைச்சரவைச் [illegible] திருப்பதாகவும் அவ்வாறே தான் நம்புவதாகவும் கூறிய போது, நல்லூர் உறுப்பினர் திரு. சிவசிதம்பரம், "நீங்கள் அவ்வாறு நம்புகிறீர்கள்!'' என்றுர்.

"ஆம்; நம்புகிறேன் நம்பிக்கைகளிற்ருனே நாம் வாழ்கிறோம்?'' என்றுர் ரொனி.

குறைநிரப்புத்தொகைமூலம் மேலதிக நிதி பெறுவதற்கான தனது எதிர்ப்பையும். அதிருப்தி கண்டனத்தையும் சில தினங்களின் முன்னர் நீதி அமைச்சின் குறை நிரப்புபிரேரணை ஒன்றின்மீது திரு.ரொனி டி மெல் வெளிப்படையாகவே சபையில் தெரிவித்திருந்தார். தன்னுடைய பட்ஜட்டைச் சமாளிக்க,பெருமளவில்செலவு செய்யும் அமைச்சுக்களின் மூலதன செலவினத்தை முன்னைய மதிப்பீட்டைவிட 272 கோடி ரூபாவினுல் அமைச்சர் குறைத்தார்.

இந்த ஆண்டில் ஏற்கெனவே 3 தடவைகள் திறைசேரி உண்டியல்கள் மூலம் பணம் பெறுவதற்கு அமைச்சர் சபையின் அங்கீகாரத்தைக் கோரிய போது, இந்த வரவு-செலவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக திறைசேரி உண்டியல்கள் மீதான எல்லையை 200 கோடி ரூபாவினுல் அதிகரிப்பதற்கு தீர்மானமொன்றைத் தாம் கொண்டுவரவிருப்பதாகவும் கூறினர்

நிதியமைச்சர் தனது உரையில், 1979ம் ஆண்டில் இறக்குமதி செல்யப்பட்ட நுகர்வுப் பொருள்களின் மொத்தப் பெறுமதி 782 · 4 கோடி ரூபாவென்றும், இதில் அரிசி, மா, சீனி; புடைவைகளின் பெறுமதி 504 ரூபாவென்றும், ஏனைய உணவுப்பொருள்களின் பெறுமதி 130 · 3 கோடி ரூபா என்றும், பிறநுகர்வுப்பொருள் பொருள்களின் பெறுமதி 148 · 1 கோடி ரூபா மட்டுமே என்றும்: 2256 கோடி ரூபாவினைக் கொண்ட மொத்த இறக்குமதியின் பெறுமதியில் இந்த 148கோடி ரூபா 6 · 5 சதவீதமே என்றும் கூறியவர்; எனவே, நாம் ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதியில் வீண் செலவு செய்கிறோம் என்ற அரசியல் எதிரிகளின் கண்டனம் நியாயமற்றதென்றும் சொன்னர் கடந்த 3 ஆண்டுகளில் அரசாங்கம் சுமார் 2283கோடி ரூபா பெறுமதியான கடன் உடன்படிக்கைகளைச் செய்துள்ளது.

1492 கோடி ரூபாவினைக் கொண்டதாகவிருந்த அமைச்சரின் பற்று குறை, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்குமான 70 ரூபா சம்பள அதிகரிப்பு யோசனையினுல் 70 கோடிரூபாவினுல் அதிகரித்தது. மீண்டு வரும் வாக்குப் பணங்களின் குறைச் செலவினம் 45கோடியானதும் புதிய பற்றுக்குறை 1517 கோடி ரூபா வாகிறது.

இதப் பற்றுக் குறையைச் சமாளிக்க அமைச்சர் பின்வருமாறு வழிகண்டார்.

கூடுதல் வருமானம் 60 · 5 கோடிரூபா; உள்நாட்டுக்கடன் படல் 375 கோடிரூபா;வெளிநாட்டு மூலங்கள் 80 கோடி ரூபா. இவற்றுடன் அமைச்சுக்களின்செலவினத்தில்ஏற்பட்ட குறைப்பு 275 · 2 கோடி ரூபாவாகும்.

இவ்விதமாக அமைச்சர் தனது 'பட்ஜட்'டைச் சமப்படுத்தினர்.

1977-ம் ஆண்டு நிதியமைச்சர் பதவியை எற்றபோது கரடன் பிரபு என்பவர் அவருக்கு அனுப்பிவைத்த நிதியமைச்சர்களுக்கான குறிப்பு ஒன்றை சபையில் வாசித்து, தனது உரையை முடித்தார் ரொனி டி மெல்.

"ஒவ்வொரு பக்கத்தாலும் நாம் தொந்தரவு செய்யப்படுகிறோம் ஆனல், நாம் வேதனையடையவில்லை, குழப்பமடைகிறோம், ஆனல் ஏமாற்றமடைந்துவிடவில்லை, கொடுமைப்படுத்தப்படுகிறோம், ஆனல் கைவிடப்படவில்லை, ஒதுக்கப்படுகிறோம், ஆனல் ஒழிக்கப்படவில்லை.

அதுமட்டுமல்ல, பெருஞ் சோதனைகளிலும் நாம் பெருமைப்படுகிறோம், ஏனெனில், சோதனை பொறுமையைத் தருகிறது. பொறுமை அநுபவத்தைத் தருகிறது. அனுபவத்திலிருந்து நம்பிக்கை பிறக்கிறது என்பதை நாம் அறிவோம்.''

அமைச்சர் நினைவுகூர்ந்த இவ்வார்த்தைகள் அர்த்தமுள்ளவை. (ம)

## தெல்லிப்பளையில் இன்று

# தமிழ்ப் பெரியார்கள் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பெரியார்கள், அமரர் வன்னியசிங்கள், அமரர் திருச்செல்வம், அமரர் வண. பிதா. தனிநாயகம் ஆகியோரின் நினைவாக நினைவுவிழாவொன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை சிறப்பாக நடைபெறுகிறது.

இந்நினைவு விழாவில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், திருக்கோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், திரு. காசி ஆனந்தன், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாளராக கலந்துகொள்வார்கள் என்று அமைப்பாளர் திரு. சிவமகர் ராசா தெரிவித்துள்ளார்.

### ஒருவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்தை அடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள ஜவுளிக்கடை ஒன்றிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் ரூபா 2400 பெறுமதியான ஒரு பகுதி ஜவுளிகளையும் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்களைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. சி. விஜயசூரியா பளை சுற்று நீதிமன்ற நீதிபதி திரு சி. கே. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 20-ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. (அ)

### பாங்கொக்...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

தலைவராகவும் யாழ். ஹொக்கிச் சங்கத்தின் உபதலைவராகவும், யாழ் பாட்மின்டன் சங்கத்தின் உபதலைவராகவும் யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவராகவும் பதவிவகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் சிறந்த விளையாட்டு வீரனுக்கான கேடயத்தை நான்கு வருடங்கள் தொடர்ச்சியாகப் பெற்றுரென்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க சேவையினருக்கிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட விளையாட்டு சுற்றுப்போட்டிகளில் இவர் இலங்கை தொழில் திணைக்களக் குழுவிற்குத் தலைமை தாங்கினர். இவரது பாங்கொக் விஜயத்திற்கான அங்கீகாரத்தை விளையாட்டமைச்சு வழங்கியுள்ளது. (வெ)

### நிவாரணம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனவு வரி; கடன்களைக் குறைத்து, உற்பத்திச் செலவினங்களையே இன்னும் அதிகரிக்கச் செய்யும்.

வரவு செலவுத் திட்டத்தில் சிகரட், குடிவகைகளின் விலையை உயர்த்தி, குடும்பப் பெண்களைச் சமாளிக்க எண்ணிய அமைச்சர்; ஏற்கனவே பால் விலை, பஸ் கட்டணங்களை உயர்த்திவிட்டுத் தப்பிக்க முயற்சிக்கின்றுர். பஸ் கட்டணங்களை இன்னொருமுறை கூட்டவும் ஆலோசனை நடக்கிறது. தபால், தந்திக் கட்டண உயர்வும் எவ்வளவு என்று தெரியவில்லை. இத்தனை 'சுமை'கள் மத்தியில் சாதாரண, நடுத்தர மக்கள் தலைதூக்குவதென்றுல் - அது அதிசயம்தான்! இதனைத்தான் 'பட்ஜட்' படம்பிடித்துக் காட்டுகிறது.

செ. அருளம்பலம்
அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு

# "சசீயின் கடிதம் காணுததால் கமலம் கவலையுற்றிருந்தார்"

## டயறி கூறும் கதைகள்

(புலோலி)

"இந்த டயறியை கொலையுண்ட எனது மகளான கமலத்திற்கு நானே வாங்கிக் கொடுத்திருந்தேன். டயறியில் குறிக்கப்பட்டுள்ள குறிப்புகள் யாவும் கமலத்திஞல் குறிக்கப்பட்ட குறிப்புக்களே."

இவ்வாறு, பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன்கொலைவழக்கு விசாரணையில் பொலீசாரால் மீட்கப்பட்டிருந்த கொலையுண்ட கமலத்தின் டயறியை அடையாளம்காட்டி சாட்சியமளித்த கமலத்தின் தாயாரான திருமதி இராசலட்சுமி அம்மா இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

1980 பெப்ரவரி 21-ம் திகதிக்கும் 22-ம் திகதிக்குமிடைப்பட்ட காலப் பகுதியில் பொலிகண்டியைச் சேர்ந்த டியூட்டறி மாணவியான கமலம் இராமச்சந்திரனை வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அருகாமையில் கொலை செய்ததாகவும், கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்தார்களெனவும் பருத்தித்துறைப் பொலிசார், கொலையுண்ட மாணவியான கமலத்தின் ஒன்றுவிட்ட சகோதரரும் பருத்தித்துறை சின்னத்தோட்டத்தைச் சேர்ந்தவருமான கந்தசாமி இராஜ்குமார் (இராஜன்) அல்லது வீரப்பன், பொன்சியஸ் பெர்ணண்டோ (றெபி) அல்லது றெபின்சன் ஆகியோர் மீது குற்றம்சாட்டி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு மீண்டும் கடந்த செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும் 2-ம் எதிரி சார்பில் சட்டத்தர்ணி ஆர், ஸ்ரீசிவாயாவும் ஆஜராகி இருந்தனர்.

நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும் பொலிசார் சார்பில் சார்ஜன் வடிவேலுவும் பொலிசாருககு உதவியாகச் சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவனருள்சுந்தரம் (காண்டீபன்), செல்விகளான உமா துரைசிங்கம், சந்திரா சச்சிதானந்தம், எல். சீ. பிலிப் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

கமலத்தின் டயறியை அடையாளம் காட்டித் தொடர்ந்து சாட்சியமளித்த திருமதி இராசலட்சுமிஅம்மா இராமச்சந்திரன் குறிப்பிட்டதாவது:

இந்த டயறி என்னுடைய மகள் கமலத்தினுடையது. இந்த டயறியை நான்தான் மகள் கமலத்திற்கு வாங்கிக் கொடுத்தேன். டயறியில் எழுதபட்டுள்ள எழுத்துக்கள் எல்லாம் எனது மகள் கமலத்தினுடையனவே. டயறியில் "இலக். 19 அப்பர் ஹோரல் பேராதனை" என எழுதப்பட்ட விலாசத்தைப் பார்த்து அந்த விலாசம் கமலம் காதலித்த சசீதரனினுடையதெனப்பின்பு தான் நான் அறிந்தேன். டயறியில் சொந்தக் குறிப்பு என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பக்கத்தில் சிவப்பு மையினல் ஆர். கீதா பொலிகண்டி உப-தபாற் கந்தோர் அருகாமை, பொலிகண்டி என எழுதப்பட்டிருந்தது. அதுவும் கமலத்தினல் எழுதப்பட்ட எழுத்துக்கதான் என அடையாளம் காட்டினர்.

டயறியின் குறிப்புகள் யாவும் நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டப்பட்டன. ஜனவரி (1980) மாதம் 10-ம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 19-ம் திகதிவரை டயறியில் குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன.

ஜனவரி 10-ம் திகதி:- குமணன் அண்ணு வந்தார். அம்மம்மா முல்லைத்தீவால் வந்தார். அம்மா டயறி வாங்கி வந்தார்.

ஜனவரி 11-ம் திகதி தொடக்கம் ஜனவரி 14-ம் திகதி வரை டயறியில் குறிப்புகள் எழுதப்படவில்லை.

ஜனவரி 15-ம் திகதி:. யோகநாயகி, மாலாவைக் கண்டேன். இன்று பொங்கல். சசீ காட் போடவில்லை நந்தன் அண்ணுவோடு வல்வெட்டித்துறை போய் கல்யாணப் பரிசு படம் பார்த்தேன். சசியின் வீட்டைப் பற்றிச் சிறிது கேட்டேன்.

ஜனவரி 16ம் திகதி: இன்று பாடசாலை தொடங்கியது அண்ணுவைக் கண்டேன் சாந்தராணி ஆரோ செல்வச் சந்திரனும் எனக்கு யாரென்று தெரியாது. ஸ்கூலில் எங்களை 'இ' வகுப்புக்கு மாற்றிவிட்டார்கள். மாலாவை டஸ்சில் சந்தித்தேன்.

ஜனவரி 17ம் திகதி: இன்று ஸ்கூல் அரைநேரம். மலாவைக் கண்டேன். சசீக்கு லெட்டர் எழுதி வந்தேன் போடவில்லை.

ஜனவரி 18ம் திகதி: ஸ்கூலுக்குப் போனேன். பஸ்ராண்டிற்குப் போகவில்லை. ஸ்கூல் பஸ்சில் வந்தேன்.

ஜனவரி 19ம் திகதி: ஒரு விசேஷமுமில்லை.

ஜனவரி 20ம் திகதி: குமணன் அண்ணுவந்தார்

(7-ம் பக்கம் பார்க்க)

# "வீரப்பா கொண்டுசென்ற பெண்தான் கொலைசெய்யப்பட்டதாக2-ம்எதிரிசொன்ஞர்'

## 1-ம் எதிரியின் மாமன் சாட்சியம்

(புலோலி)

"அந்தோனிப்பிள்ளை என்பவர் என்னிடம் வந்து, விளக்கமறியலில் 1ம் எதிரியைச் சந்திப்பதற்காக என்னை வரும்படியும், 1ம் எதிரியுடன் ஏதோ கதைக்கவேண்டுமென்றும், 1-ம் எதிரிக்கு வழக்குச் செலவாக 5,000 ரூபா தருவதாகவும் சொன்னர். ஆனல் நான் அவற்றிற்குச் சம்மதிக்கவில்லை".

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்தமுதலாம்எதிரியின்மாமஞரானபருத்தித்துறை சின்னத்தோட்டத்தைச் சேர்ந்த சிங்கராசா அந்தோனிப்பிள்ளை (தங்கராசா) குறிப்பிட்டார்.

இவ்வழக்கு மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி, சபாரத்தினத்தினதும், 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராஞர்கள் வழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த அந்தோனிப்பிள்ளை குறிப்பிட்டதாவது,

1-ம் எதிரி எனது மகளான மேரிதிரேசாவைக் கடந்த79-ம ஆண்டு ஐப்பசி மாதம் திருமணம் புரிந்திருந்தார். இவ்வழக்கின் 2-ம் எதிரியையும் எனக்குத் தெரியும். கடந்த மாசிமாதம் 21-ந் திகதி 1-ம் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்தார்.

அன்றிரவு ஒன்பதரை மணியளவில் 1-ம் எதிரியை அவரது சிறியதாயார் கூப்பிடுவதாகச் சிலர்வந்து முதலாமெதிரியைக் கூப்பிட்டார்கள். நான் முதலாமெதிரியை எழுப்பிவிட்டேன். 1-ம் எதிரி வந்து கூப்பிட்டவர்களுடன் சென்ருர். சிறிதுநேரத்தின்பின் நானும் வெளியே சென்றேன். வெளியேசென்றநான்பீச்றோட்டால் பத்மநாதன் வீட்டுப் பக்கமாகச் சென்றேன். அங்கே ஆட்கள் நின்ருர்கள். அவ்விடத்தில் யார்யார் நின்ருர்கள் என்பதை நான் நன்ஞகக் கவனிக்கவில்லை. ஆனல் அங்கே நின்றவர்களிடம் வீரப்பா எங்கே என்று கேட்டேன்,

அதற்கு அவர்கள் வீரப்பாவைக் காரில் ஏற்றிப்போய் விட்டாககள் என்று சொன்ஞர்கள். நான் அவ்விடத்திலேயே நின்றேன். நான் அவ்விடத்திற்குப் போனபோது பற்றிக் பெர்ஞண்டோவும் அவ்விடத்தில் நின்ருர்.

பின்னர் அதிகாலை இரண்டு மணிபோல் வீரப்பாவும் ஏனையோரும் சென்றகார் வந்தது. காரில் வந்தவர்கள் இறங்கிப் பத்மநாதன் வீட்டிற்குள்சென்ருர்கள்.

பத்மநாதன் வீட்டில் வீரப்பாவுடன் ஆட்கள் கதைவழிப்பட்டார்கள். பொலிசுக்குப் போகவேண்டுமென்று, சிலர் கூறியதும் எனக்குச் சேட்டது. நான் பத்மநாதன் வீட்டிற்குள் போகவில்லை. வீட்டின் வெளியிலேயே நின்றேன். சற்று நேரத்தில் அங்கிருந்தவர்கள் வீரப்பாவைக் காணவில்லை என்று தேடிஞர்கள். பின்பு நான் வீட்டிற்குப்போய் எனது மகள் திரேசாவை உனது கணவன் வீரப்பா இங்கு வந்தாரா எனக்கேட்டேன், அப்போது திரேசம்மா வீரப்பா வந்து தான் அவசரமாகப் போகவேண்டுமென்று கூறித் தனது கையில் இருந்த சேட்டையும் எடுத்துக்கொண்டு சென்றதாகச் சொன்ஞர். அத்துடன் தான் வீரப்பாவுக்கு (ஐயா (நான்) வந்தபின் போகும்படி சொன்னதாகவும் அவர்தான் அவசரமாகப் போகவேண்டுமென்று கூறிச் சென்றதாகவும் சொன்ஞர். வீரப்பா பயந்த நிலையில் காணப்பட்டதாகவும் அவர் சொன்ஞர்.

நான் பின்பு வீட்டில் தங்கிவிட்டு விடிந்தபிறகு கடற்கரைக்குப் போனபோது 2-ம் எதிரி என்னைச் சந்தித்து 'ஒரு பெண்பிள்ளை கொலைசெய்யப்பட்டிருக்கிறது என்று எனக்குச் சொன்ஞர். நான் உடனே கொலைசெய்யப்பட்ட பெண்பிள்ளை யாரென்று கேட்டேன். அப்போது 2-ம் எதிரி வீரப்பா கொண்டுபோன பெண்பிள்ளைதான்கொலைசெய்யப்பட்டுள்ளதாகச் சொன்ஞர். பின்பு நான் வீட்டிற்குச் சென்றுவிட்டேன்,

நீதவான்; 22-ம் திகதி வீரப்பா கொண்டுபோன பெண்பிள்ளைதான் கொலை செய்யப்பட்டதாக உனக்குச் சொன்னபோது இந்தத் தகவலைப் பொலிசிற்கு அறிவித்தாயா?

சாட்சி: இந்த விடயம் அப்போது அவ்விடத்தில் வேறு ஆட்களுக்கும் தெரிந்திருப்பதாக எனக்குத் தெரிந்தது. அதனல் நான்பொலிசிற்கு அறிவிப்பதுபற்றி யோசிக்கவில்லை.


# நெற்பயிரைக் காக்கும் களைநாசினிகளில் தலைசிறந்தது




# அக்றெக்ஸோன்

சிறு கோரை, மும்மூட்டுக் கோரை, சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக் கட்டவல்லது அக்றெக்ஸோன்.

எம்சீபீஏ கொண்ட அக்றெக்ஸோன் சகல கோரைகள், புற்கள் முதலாம் அகன்ற இலைக்களைகளையும் தேர்ந்து கொல்லும் வன்மை வாய்ந்தது. சீஐசீ வழங்கும் அக்றெக்ஸோன் நெற்பயிரைப் பாதிப்பதில்லை.

அதிக நெல் விளைச்சலைத் தருவது அக்றெக்ஸோன்.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

TAL 5921

| நிகர அளவு | | சில்லறை விலை |
| --- | --- | --- |
| 450 மி.லீ. | போத்தல் | ரூ. 23.90 |
| 4.5 லீட்டர் | கொள்கலம் | ரூ. 206.60 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
நீதி
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். —லதா
உலகம் சுற்றும் வாலிபன்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா
பாலாடை

மனோகரா (யாழ்ப்பாணம்) Grand Release
தினசரி 4 காட்சிகள்
Peter Cushing in
Dr. Who and the Daleks
(Scope-Color)

அநேக இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
இதுவரை பார்க்காதவர்களுக்கு இது அரிய வாய்ப்பு!
சாந்தி யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
நீ யா? வெள்ளிவிழா வண்ணச்சித்திரம்

வெற்றி முழக்கமிடும் 6-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

75-வது நாளைநோக்கி வீறுநடை போடுகிறது
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 7-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

WINDSOR
(JAFFNA) DAILY 5 SHOWS
Daily at 10-30 A.M., 2-30, 4-30, 7-00&9-30P.M.only

தான் செய்யாத குற்றத்திற்காக மெக்சிக்கோ சிறையில் 28 வருடங்கள் வாழ்கிறன் ஒரு கணவன். கணவனைச் சிறைக்கு அனுப்பியது பேரனுரின் சூழ்ச்சி என்பதை மனைவி உணர்கிறுள், அன்பும், பண்பும் பதிபக்தியும் நிரம்பிய மனைவி தியாகங்கள் பல புரிகிறுள். இருந்தும் வீரதீரசூரன் புருெண்சன் ஒருவனுல் மாத்திரம் அவனை மீட்க முடிகிறது.

CHARLES BRONSON' ROBERT DUVALL,
JILL IRELAND
in
"BREAK OUT"
Jailed for a crime he never committed - Only Charles Bronson can get him out!
Adults. Color Action.


# நடேஸ்வரா தெரிவு!

(காங்கேசன்துறை)

யாழ்ப்பாணப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் வடபகுதியில் உள்ள பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2-ம் பிரிவில் 'பி' பகுதி சாம்பியன்களாக காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி இச்சுற்றுப்போட்டியில் தமது பிரிவில் கலந்து கொண்ட எல்லாப் போட்டிகளிலும் வெற்றியீட்டியதுகுறிப்பிடத்தக்கது

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துடன் காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 6—1 கோல்களாலும் கொக்குவில் இந்து கல்லூரியுடன் கொக்குவில் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 2—1 கோல்களாலும்; யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியுடன்பட்டினசபை மைதானத்தில்நடைபெற்ற இறுதிப் போட்டியில் 3—0 கோல்களாலும் வெற்றியீட்டினர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி இப்பிரிவில் சாம்பின்களாக வந்ததின்மூலம் கால் இறுதிப் போட்டிக்குக் கலந்துகொள்ளத் தகுதிபெற்றனர்.

## தென்னங்கன்றுகள் விநியோகம்

(பச்சிலைப்பள்ளி)

மரம்நாட்டும் இயக்கத்தை முன்னிட்டு பளை கமநல சேவை நிலையம் 1000 தென்னங்கன்றுகளை பொதுமக்களுக்கு விற்பனை பெய்யவுள்ளது.

இத்தென்னங்கன்றுகள் விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இத் தென்னங்கன்றுகள் கிளிநொச்சி தென்னை அபிவிருத்தி நிலையத்திலிருந்து பெறப்பட்டுள்ளன.

## பரி. யோவான் வெற்றி

(அரியாலை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி லண்டன் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், யாழ். பரி. யோவான் கல்லூரி முதலாம் பிரிவு உதை பந்தாட்டக் குழுவினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பரி யோவான் கல்லூரிக் கோஷ்டி 1:0 கோலை அடித்து வெற்றி பெற்றது.

பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. என். எஸ். தனபாலன் மத்தியஸ்தம் வகித்தார். (அ)

## உதைபந்தாட்ட போட்டி

(பலாலி)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 3-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டி 0—0 ஆக வெற்றி தோல்வி யின்றி முடிவடைந்தது. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. முருகேசு கடமையாற்றினுர். 2-ம் பிரிவுப் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி 3—0 கோல்களால் மத்திய கல்லூரியை வென்றது.


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
ராணி சம்யுக்தா


# சசீயின் கடிதம்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி 21ம் திகதி: மாலாவைஸ்கூல் பஸ்ஸில் சந்தித்தேன். யோகநாயகி தி. டுண்தன் அ. வந்தது பற்றிக் கேட்டார், நாளை பஸ்ஸ்ராண்டிற்கு வரும்படி கேட்டார். நான் ஓம் என்றேன். ஏதோ கதைக்கலாம் ஸ்கூல் இன்று படிப்பு நடந்தது.

ஜனவரி 22ம் திகதி: ரியூசனுக்குப்போனேன் மாலாவைக்கண்டு கதைத்தேன். அவ சசீ என்னைச் சந்தேகிப்பதாகச் சொன்னுர். நான் மிகவும் மன வருத்தம்அடைந்தேன். சசீக்கு உண்மையை எழுதும்படி சொன்னு. நான் இரவு லெட்டர் எழுதினேன்.

ஜனவரி 23ம் திகதி: சசீக்கு காலை லெட்டர் போட்டேன் ஸ்கூல் மற்ஸ் ரீச்சர் பிழையாக செய்த நீ என்று திருத்திவை சாந்தி ஏதோ அலம்பினுள் நான் மைண்ட்பண்ண வில்லை.

ஜனவரி 24 ம் திகதி: ஸ்கூல் மற்ஸ் ரீச்சர் எழுப்பிவிட்டவ. சாந்த குமாரிவரவில்லை மாலாவுடன் கதைக்கவில்லை.

ஜனவரி 25ம் திகதி: இன்று விரதம். மாலாவுடன் டஸ்ஸில் வந்தேன். லெட்டர் போட்டதோ என்ரு. நான் ஓம் என்றேன். சசீக்கு இன்று லெட்டர் கிடைத்திருக்கும். ஹாட்லி போய் (பையன்) ஒன்று வித்தியாசமாக.

ஜனவரி 26ம் திகதி: ஒரு இடமும் போகவில்லை. பின்னேரம் குமார் வீட்டை போனேன். அருமை அண்ணு வாங்கிவந்து.

ஜனவரி 27ம் திகதி: குமணன் அண்ணுவந்தார் சசீ நேற்று லெட்டர் போட்டிருப்பாரென நினைக்கிறேன். இன்று ஒரு இடமும் போகவில்லை.

ஜனவரி: 28ம் திகதி ஸ்கூல் அரைநேரத்துடன் விட்டது. வீட்டிற்கு வர 2 மணியாகி விட்டது. ஹட்லி போய் (பையன்) ஒன்று பஸ்ஸில் வித்தியாசமாக நடந்தார். சசீயின் லெட்டர் இன்று எங்கள்வீட்டிற்கு வரவில்லை.

ஜனவரி: 29 ம் திகதி: பஸ்ஸ்ராண்டிற்குப் போனேன் அந்த போய் (பையன்) நின்றது சசியின் லெட்டர் வரவில்லை, குமாருக்குக் கடிதம் போட்டாரோ தெரியாது.

ஜனவரி 30ம் திகதி: ஸ்கூலால் படத்திற்குப் போனேம் இன்றும் லெட்டர் வரவில்லை. உமா அண்ணுவை பஸ்ஸ்ராண்டில்கண்டேன். அந்த ஹாட்லி போய் (பையன்) இன்றும் வந்தது.

ஜனவரி 31ம் திகதி: இன்று ஸ்கூல் லீவு ஒரு இடமும் போகவில்லை.

பெப்ரவரி 1ம் திகதி: ஸ்கூல் போனேன். பின்னேரம் பஸ்ஸில் இருக்க ஹாட்லி போய் (பையன்) ஒன்று போஸ்ற் காட் ஒன்றை எறிந்தான். சசீ லெட்டர் போடவில்லை. இப்படிச்செய்வாரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

பெப்ரவரி 2-ம் திகதி :- அன்று காலை 7-45 மணிக்கு ரியூசனுக்குப் போனேன். பிற்பகல் 2-30 மணிக்கும் போனேன். பிற்பகல் றஞ்சன் அண்ணுவைக் கண்டேன். பின்னேரம் பலாலிப் பாடசாலைக்குக்கலைவிழாவுக்குப்போனேன். அங்கு "நெடியகாடு" வந்திருந்தான். இன்னும் சசீயின் லெட்டர் வரவில்லை.

பெப்ரவரி 3-ம் திகதி:- இன்று ஒரு இடமும் போகவில்லை. நான் சசீ இப்படிச் செய்வாரென்று நம்பவில்லை. நான் அவரின் மனதை மாற்ற இயலாது. கொடுத்துவைத்தது.

பெப்ரவரி 4-ம் திகதி :- இன்று லீவு ரியூசனுக்குப் போனேன்.

பெப்ரவரி 5-ம் திகதி :- இன்று ரியூசனுக்கும் போனேன். ரவுணுக்கும் போனேன். ஹாட்லிபோய் பின்தொடர்ந்தான். சிசீயிடமிருந்து லெட்டர் வரவில்லை.

பெப்ரவ்ரி 6-ம் திகதி :- இன்று ரியூசனுக்குப் போனேன். இன்று அவன்கள் ரியூசனுக்குப் போகும் வழியில் ஒரு லெட்டர் போட்டான்கள். நான் எறிந்துவிட்டேன். அதுபற்றி அம்மாவிடம் கூறவில்லை. பாலா அண்ணுவிடம் கூறவில்லை, சசீயிடமிருந்து லெட்டர் வரவில்லை. இன்றும் ஒரு லெட்டர் போடப் போகிறேன். இதுதான் கடைசி.

பெப்ரவரி 7-ம் திகதி :- இன்று ஸ்கூலிலிருந்து அரைநேரத்துடன் வந்துவிட்டேன். ரவுணில் ஒரு பிழை செய்துவிட்டேன். ரியூசனுக்குப் போனேன். சசீயிடமிருந்து லெட்டர் வரவில்லை.

பெப்ரவரி 8-ம் திகதி ;- இன்று ரியூசன் இல்லை. ரவுணில் பஸ் எடுத்தேன். பஸ்ஸில் அந்த ஹாட்லிபோய் (பையன்) லெட்டர் போட்டான். நான் கிளித்தெறிந்துவிட்டேன். சசீ லெட்டர் போடவில்லை.

பெப்ரவரி 9-ம் . திகதி :- காலை ரியூசனுக்குப் போனேன். நெடியகாட்டுபோய் (பையன்) ஒரு லெட்டர் போட்டான். நான் எறிந்துவிட்டேன். பின்னேரம் ரியூசன் இல்லை. இன்றும் சசீயின் லெட்டர் வரவில்லை.

பெப்ரவரி 10-ம் திகதி :- இன்று குமணன் அண்ணு வந்தார். நான் எனக்கும் சசீக்கும் உள்ள தொடர்பை ஒரு கதையாய் எழுதினேன்.

பெப்ரவரி 11-ம் திகதி:- நான் எழுதிய கதையை ஜெகாவிற்குக் காட்டினேன். அவள் அதை உண்மை என்று நம்பிவிட்டாள். நான் இல்லை என்று எதிர்த்தேன். ரியூசனில் இங்கிலீஷ் கிளாசிற்கு இருக்காமல் வந்துவிட்டேன். ஸ்கூலில் யசோவுடன் சண்டை பிடித்தேன்.

பெப்ரரி 12-ம் திகதி :- இன்று 79-ம் ஆண்டு டயறியை ஜெகாவிற்குக் காட்டினேன். உண்மையைக் கூறினேன். அவள் ஒன்றும் சொல்லவில்லை.

பெப்ரவரி 13-ம் திகதி :- இன்றும் ஜெகாவிற்குக் காட்டினேன். சசீலெட்டர் காலமை போட்டேன். சாந்தி வந்ததா என்று கேட்டாள்.

பெப்ரவரி 14-ம் திகதி :- இன்று ஸ்கூல் இல்லை. ரியூசன் இருந்தது போனேன் இப்போவிட்டதும் பஸ்ஸ்ராண்டிற்குப் போவதில்லை. அதனுல் அந்த ஹாட்லிபோய் (பையன்) சேட்டை விடுவதில்லை. சிவராத்திரி பிள்ளையார்கோவிலில் முழித்தேன். அந்தபோயி (பையன்)ன் பெயர் கோபி.

பெப்ரவரி 15-ம் திகதி ;- இன்று ஸ்கூலுமில்லை. ரியூசனும் இல்லை.

பெப்ரவரி 17-ம் திகதி :- இன்று ரியூசன் 4-30க்கு இருந்தது. 6 மணிக்கு முடிந்தது. நெடியகாட்டுபோய் (பையன்) வந்து ஒரு கன்டொஸ் எறிந்தான். நான் கீழே போட்டுவிட்டேன். அவன் திரும்ப எடுத்துவிட்டான்.

பெப்ரவரி 18-ம் திகதி :- இன்று ஸ்கூல் போனேன் ஸ்கூல் முடிந்து வரும்போது மாலாவிடம் சசீயின் விலாசம் மாறியதா என்றும் மாறினுல் அதைத் தரும்படியும் கேட்டேன். அவ குமாரிடம் கேட்டுத்தருவதாகச் சொன்னு. ஜெகாவும் கூடிவந்தவ. அவவுக்கும் தெரியும்.

பெப்ரவரி 19-ம் திகதி :- இன்று ஸ்கூல்போனேன். பஸ்ஸில் சாந்தியைக் கண்டேன். அவ சசீயை மறந்து படிக்கும்படியும் இனி நாங்கள் நினைப்பதுபோல் நடவாதென்றும் கூறினுர். நான் எப்படி சசீயை மறப்பது என்று அந்த நினைவை அகற்ற முடியாது என்றேன். பின்னேரம் ஹாட்லிபோய் வந்தான். ஜெகாவிற்குச் சசீயின் லெட்டரைக் காட்டிசனன்.

இதன்பின்னர் டயறியில் வேறுகுறிப்புகள் இருக்கவில்லை.

நீதவான்:- இந்த டயறியில் கீதா என்று எழுதப்பட்டிருக்கிறது. உங்கள்மகள் கமலத்திற்கு கீதா என்றும்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

# பணயக் கைதிகள் மூலம்

## ஈரான் எதனையும் சாதிக்கமுடியாது!

### அமெரிக்க ஜனாதிபதி றீகன் எச்சரிக்கிறார்

வாஷிங்டன், நவ. 7

**“அமெரிக்க அதிகாரிகளை கைதிகளாகப் பணயம் வைத்துக்கொண்டு, ஈரானியத் தலைவர்கள் எதனையும் சாதித்துவிடமுடியாது” என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் எச்சரித்துள்ளார்!**

கடந்த நான்காம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் அமோக வெற்றிபெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபின்னர் திரு. றீகன் நேற்றுமுதற்றடவையாகநடத்திய பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்தான் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

திரு. றீகன் ஜனவரி மாதம் 20-ம் திகதி. ஜனாதிபதியாகப் பதவியேற்கின்றார்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் திரு. றீகன் மேலும் தெரிவிக்கையில், “பணயக் கைதிகளை வைத்துக்கொண்டு சாதனைபுரிய ஈரான் முயற்சிக்கிறது. நான் பதவியேற்கும் வரை, அவர்களை விடுதலை செய்வதில் தாமதம் மேற்கொள்வதன் மூலம் ஈரானியத் தலைவர்கள் எதனையும் சாதித்துவிட முடியாது” என்றார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கப்பற்றி திரு. றொனல்ட் றீகன் கருத்து வெளியிடுகையில், “பாலஸ்தீன விடுதலை இயக்கம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு இயக்கமல்ல. அது ஒரு பயங்கரவாதக்குழு” என்று வர்ணித்தார்.

ஆசிரியர் சம்பளப்பணம் கொள்ளை முயற்சி;

## சந்தேகநபர் அடையாளம் காட்டப்படவில்லை

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய ஆசிரியர்களது சம்பளப் பணக்கொள்ளை முயற்சி தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட இரு சந்தேக நபர்கள் அடையாளம்காணப்படாததால் விடுதலை செய்யப்பட்டனர்.

இடைக்காடு மகாவித்தியாலய அதிபரும், ஆசிரியர் ஒருவரும் கடந்த மாதம் 21-ம் திகதி பகல் சுமார் 1.30 மணியளவில் அச்சுவேலி தபால் நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் ஆசிரியர்களது சம்பளப் பணமான 23 ஆயிரத்து 205 ரூபாவை எடுத்து வந்த சமயம் தம்பாலை - விமான் நிலைய வீதியில் துப்பாக்கி சகிதமான இரு இளைஞர்கள் இவர்களை வழிமறித்து, பணத்தைக்கொள்ளையடிக்க முயன்றபோதும் அம்முயற்சி பயன் அளிக்கவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணையிலீடுபட்ட காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் இடைக்காட்டைச் சேர்ந்த இராசையா புவனேந்திரன், தம்பு சிவலிங்கமூர்த்தி ஆகியோரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது அடையாள அணிவகுப்புக்கு உத்தரவிடப்பட்டது.

மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றபோது 1-ம் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சு. நடராசாவும், 2-ம் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும் அடையாள அணிவகுப்பை ஆட்சேபித்தனர்.

பதில் நீதிபதி ஆட்சேபனையைப் பதிவு செய்த பின்னர் அடையாள அணிவகுப்பை நடத்தினார். இடைக்காடு மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். வி. மகேஸ்வேல், ஆசிரியர் எஸ், தங்கவேல் ஆகியோர் அடையாளம் காண்பதில் ஈடுபட்டு சந்தேக நபர்களை அடையாளம் காட்டவில்லை;

சந்தேக நபர்கள் மீது வேறு சாட்சியங்கள் ஏதாவது இருக்கிறதா? என்று விசாரித்த நீதிபதி அவ்வாறு இல்லை என்று தெரிவித்ததால், அவர்களை விடுதலை செய்வதாகக் கூறினார்.

## சுவீப் முடிவுகள்

[illegible] மத்திய லொத்தர் சபையின் 838-வது சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு.

முதலாம் பரிசு
**06 K 0069**
ரூ.100,000

இரண்டாம் பரிசு
**21 P 0974**
ரூ. 40,000

மூன்றும் பரிசு
**11 B 0388**
ரூ.10,000

## இன்று நடைபெறும் யாழ். றோட்டறிக் கழக குற்றத்தடுப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டறி கழகத்தின் ஆதரவில், யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் இன்று காலை ஒன்பது மணிக்கு குற்றத்தடுப்பு கருத்தரங்கு நடைபெறும்.

யாழ். றோட்டறி கழகத்தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர், சிறைச்சாலை கமிஷனர் திரு. டி. பி. டெல்கொட, உதவிப் பொலீஸ் அதிபர் ஜனாப் எம். எஸ். நிஸாம், யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன், முன்னாள் றோட்டறி கழகத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் ஜே. பி. யு. எம்; முன்னாள் சிறைச்சாலை ஆணையாளரும், முன்னாள் குற்றத் தடுப்பு நிறுவன (ஐ. நா. சபைகள்) ஆலோசகருமான திரு. வி. என். பிள்ளை ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். இதனைத்தொடர்ந்து கருத்தரங்கு நடைபெறும். கருத்தரங்கில் நீதிபதிகள், சட்டத்தரணிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

கருத்தரங்கின் முடிவில் பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்பட்ட கொலை, கொள்ளைத் தடுப்பு சித்திரப் போட்டியில் பரிசு பெற்ற ஆறு மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். யாழ். றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் திரு. ஆர். நே. குணரத்தினம் நன்றி கூறுவார்.

### யாழ். கிளை அங்குரார்ப்பணம்

கருத்தரங்கைத் தொடர்ந்து கொலைபுரிதலையும் தவறு புரிதலையும் தடுப்பதற்கான தேசிய கழகத்தின் யாழ். கிளை அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

## இலங்கை எழுத்தாளருக்கு கிடைத்த கௌரவம்!

### அருள் சுப்பிரமணி த்துக்கு கலை இலக்கிய நண்பர் கழகம்பாராட்டு

(கொழும்பு)

இந்திய சஞ்சிகைகள் இலங்கை எழுத்தாளர்களைப் புறக்கணித்தகாலம் மெல்ல அருகிவருகிறது. எதுவித காழ்ப்புணர்வும் இன்றி ‘ஆனந்தவிகடன்’ சஞ்சிகை தனது பொன்விழாவை ஒட்டி நடாத்திய நாவல்போட்டியில் இலங்கை எழுத்தாள[illegible] [illegible] முதலா[illegible]வது பரிசான ரூபா நாற்பதினாயிரத்தை (இலங்கைப் பணத்தில் ஈட்டிக்கொண்டமை இலங்கை எழுத்தாளர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்த பெருவெற்றியும். கௌரவமுமாகும்” இந்த மகத்தான சாதனைக்காக திரு. அருள் சுப்பிரமணியத்தை எமது கழகம் பாராட்டுகிறது”

இவ்வாறு க. அருள்சுப்பிரமணியம் ‘ஆனந்தவிகடன்’ பரிசுபெற்றதையொட்டி, கொழும்பு கலைஇலக்கிய நண்பர் கழகத்தின் செயலாளர் திரு. நெல்லை க. பேரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

“அண்மைக் காலங்களில் இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை என. சி. பி. எச். நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. மல்லிகை ‘ஆசிரியர்’ திரு. டொமினிக் ஜீவாவின் பேட்டி மணியனின் ‘இதயம் பேசுகிறது’ சஞ்சிகையில்; இவரது [illegible] கட்டுரைத்தொடர் ‘குமுதம்’ தீபாவளி மலரிலும் வெளியிடப்பட்டுள்ளன. தாமரை, கணையாழி சிகரம் போன்ற தமிழக சிறு சஞ்சிகைகளிலும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் அடிக்கடி வெளியாகிவருகின்றன. எமது எழுத்தாளர்கள் இந்த வாய்ப்புக்களை மிக நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

## கூட்டணிசெயற்குழு [illegible] பொதுக்குழு நாளையும் கூடும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணி செயற்குழு இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டையிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் கூடுகிறது.

பொதுச்சபை நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் கூடுகிறது.

இவ்விரு கூட்டங்களிலுமுக்கியமாக கூட்டணியின் அமைப்பு விதிகளில் மாற்றம் செய்வது குறித்து விரிவாக தாராயப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது

இன்றைய அரசியல் நி[illegible] குறித்து இக் கூட்டங்களில் ஆராயப்படுவதோடு இயக்க ஏடு குறித்தும் ஆலோசனை செம்யபபடும் என்று கூட்டணி பிரமுகர் ஒருவர் கூறினார். (இ)

## பாராட்டு விழாவும் நூல் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினர் இன்று பிற்பகல் கோண்டாவில்இராமகிருஷ்ண மண்டபத்தில் பாராட்டு விழாவும் நூல் அறிமுக விழாவும் நடத்தவுள்ளனர். கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பலகலைக் கழகத்தின் சிறப்புப்பட்டம்பெற்ற அறிஞர்களான நாடக வித்தகர் கலையரசு சொர்ணலிங்கமும், இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாயதேசிகரும் மற்றும் கம்பன் கழகம் கௌரவித்த எழுத்தாளர் இ மகாதேவா(தேவன்)வும் பாராட்டப்படவுள்ளனர். பாராட்டுரையைப் பேராசிரியர் கா சிவத்தம்பி. க. உமாமகேஸ்வரன், க. சொக்கலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்

புலவர் ம. பார்வதிநாதசி[illegible]த்தின் ‘இருவேறு உலகம்’ கவிதைத் தொகுதியின் ஆய்வுரையை திரு. வீ. க. வீ., திரு. குழந்தைவேலு ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

## சிறைக்காவலர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தப்பி ஓடி விட்டனர். சிறைக்காவலர் பலத்தகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர்களில் சின்னராசா, செல்வகுமார் என்ற இருவரும் நேற்று முந்தினர் சங்கானையில் சைக்கிள் ஒன்றைக் கொள்ளையடிக்க முயன்றபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டனர், மூவர் நேற்று சிறைச்சாலையில் சரணடைந்தனர். மற்றமூவர் இதுவரை தலைமறைவாக இருந்து வருகின்றனர். (கு)

## மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர் பொன். கத்தையனார் திருவாளர்கள் எஸ். கடாட்சம் மா. சிதம்பரநாதன், பி. அம்பிகைபாகன், ம அன்ரன், எஸ், பொன்னுதுரை எஸ். அம்பலவாணபிள்ளை, எஸ், வைத்திலிங்கம் ஆகியோர் உரையாற்றுவர்.

இசைப்புலவர் சி. செல்லத்துரை வரவேற்புப் பாமாலை இசைப்பார் திருமதி தவமணி அம்பிகைபாகன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

ஒன்றுமாலை கச்சாயில் கொடிகாமம் கச்சாய் ஐ. தே. , மகளிர் கிளையை மாவட்ட அமைச்சர் திரு யூ பி. விஜ[illegible]ய கோன் அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்

கச்சாய் - கொடிகாமம் ஐ. தே. க. வாலிப முன்னணியினர் இந்த வரவேற்பை ஒழுங்கு செய்துள்ளனர் (க-சு)

## அன்ரன் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)

[illegible]லிஸ் சார்ஜட் அன்ரன் கொலை வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீவவான் ரி ஜோகநாதன் முன்னிலையி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இம்மாதம் 10-ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது. (க)

## ஆறுநாள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தினங்களும் உபவாசமிருந்து முருகன் புகழ்மாலைகளைப் பாராயணஞ் செய்தும் புராணங்கேட்டும் முறைப்படி விரதம் அனுட்டிப்பவர்கள் முருகன் அருள்பெறுவர். ஆறு தினமும் உபவாசமிருக்க இயலாதவர்கள் ஒருபொழுதுண்டு ஆறுவதுநாள் உபவாசமிருத்தல் வேண்டும்.

ஆறு முகங்களையுடைய பிரானுக்கு ஆறுநாட் கொண்டாட்டம். ஆறும்நாட் பெருங்கொண்டாட்டம். ஆறு நாட் கொண்டாட்டம் — ஆறுநாள் நோன்பு—காமக்குரோத லோகமோக மத மாற்சரியமாகிய அறுபகைகளையு மகற்றுவதாகும்.

மூருகன் குமரன் குகனென்று
மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்
வென்றருள்வாய்

(மன்னா)

மன்னார் காணி அபிவிருத்தி அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. பாஸ்கரதாஸ் இவ்வாரம் முதல் பிரதேச அபிவிருத்தி அமைச்சில் பதவி ஏற்கவிருக்கிறார். (அ)

## சசியின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் உண்டா? — நாங்கள் அவவை வீட்டில் கீதா என்று தான் அழைப்பது வழக்கம்.

கமலத்தின் இந்த டயறி கமலம் கொலைசெய்யப்பட்ட பின்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மீதிவிசாரணை இம்மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைக்ககப் பட்டது.

பொருபுங் கவரும் புவியும்
பாவுங்
குருபுங் கவவென் குணபஞ்
சரனே
—கந்தர் அனுபூதி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No GB 8948/78 The Eelanaadu P. B. No 49. Cable Eelanaadu. Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org